பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 15 | செவ்வாய்க்கிழமை | (29.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 193

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# எதிர்கால சமாதான முன்னெடுப்புக்களை தடம் புரளவைக்கும் கருணா விவகாரம்

## விளைவுகளுக்கு அரசும் இராணுவமுமே பொறுப்பு-சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் புலிகளினால் விலக்கப்பட்ட கருணாவை இராணுவம் பாதுகாப்பளித்து வைத்துக் கொண்டு, பதற்றத்தையும்,குழப்பத்தையும், படுகொலைகளையும் திட்டமிட்டு செயற்படுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அதற்கு சரியான தீர்வு வரும் வரையில் எமது படைத்தளபதிகள் இராணுவத்தினரைச் சந்திக்கின்ற நிலைமைகளைத் தவிர்த்து வருகிறார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றொன்பியுறு ஹெவ்டேயை கிளிநொச்சியில் வைத்துச் சந்தித்துப் பேசிய பின் செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பினையடுத்து அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாட்டின் எதிர்கால சமாதான முயற்சிகள் அரசாங்கத்தினதும் இராணுவத் தரப்பினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்ற பின் யுத்த நிறுத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகள் சந்திப்பு



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்றுக் கிளிநொச்சியில் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இச் சந்திப்பு பயனுள்ள ஒரு சந்திப்பாக இருந்ததுடன் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஆதரவு வழங்கிவருவதாக யுத்த நிறுத்க கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றொன் பியுறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கருணா விவகாரம் பல குழப்பங்களையும் அச்சுறுத்தல்களையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் இச் சந்தர்ப்பத்தில் இச் சந்திப்பு பயனுள்ள சந்திப்பாக அமைந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மேல்நீதிமன்றத்தில் நேற்று ராஜபக்ஷ ஆஜர்படுத்தப்பட்டார்

### விசாரணை ஜூலை 28க்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முதலாம் பிரதிவாதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ யாழ்.குடாநாட்டில் காணாமல் போனோர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கு.பொ.சி. வரதராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரியாலை இராணுவ முகாமில் கடமையாற்றும் போது கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமரத்தின ராஜபக்ஷ வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் சிறைக்காவலர்களினால் விமானம் மூலம் பலாலிக்கு அழைத்து வரப்பட்டு பொலிஸாரினால் பாதுகாப்புடன் யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹன்டர் மோதியதில் சிறுவன் ஸ்தலத்தில்பலி

### துன்னாலையில் சம்பவம்

(பருத்தித்துறை)

ஹன்டர் மோதியதில் சிறுவன் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இக் கோரச் சம்பவம் நேற்று துன்னாலையில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தின் போது துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த சிவாஜிகணேசன் சிவகுமார் (வயது7) என்ற சிறுவனே மரணமானவராவார்.

சிறுவர்கள் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சமயம் வீடொன்றினுள் இருந்து ஹன்டர் வெளியிலே வந்ததாகவும் ஹன்டரைக் கண்ட சிறுவர்கள் சிதறியோடிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆடையை அழுத்தம் செய்தவர் மின்சாரம் தாக்கியதில் பலி

### பருத்தித்துறையில் சம்பவம்

(பருத்தித்துறை)

மின்னழுத்தியால் ஆடையை அழுத்தம் செய்தவேளை மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 8மணியளவில் பருத்தித்துறை சுப்பர் மடப் பகுதியில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் மாதகலைச் சேர்ந்த இருதயராசா இருதயசீலன் (வயது38) என்பவரே மரணமானவராவார்.

திருமண வைபவம் ஒன்றிற் கலந்து கொள்வதற்காகத் தனது ஆடையை அழுத்தம் செய்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அவரது சடலம் உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணையை பருத்தித்துறைப் பதில் நீதிவான் என்.தங்கராசா மேற்கொண்டார்.

பிரேதப்பரிசோதனையை வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் மேற்கொண்டார். மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. [illegible]

## தமிழ்க் கூட்டமைப்பினர் இளம்பரிதியுடன் சந்திப்பு

(திருநெல்வேலி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் நேற்றுச் சந்தித்து யாழ்.குடாநாட்டு நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ்.மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் சுமார் இரு மணி நேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா,ரவிராஜ், கஜேந்திரன், கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இது குறித்து கருத்துக் கூறிய இளம்பரிதி;

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

நேற்றுக் கூடிய பொதுச் சபைக் கூட்டத்தில் இம் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் செயற்படுத்தும் வரை போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக ஊழியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று [illegible]

## புத்தளம் பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்தில் தீ

### பெருமளவு ஆவணங்கள் எரிந்தன

(புத்தளம்)

புத்தளம் பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் பெருமளவு ஆவணங்கள் எரிந்து சாம்பலாகியது.

நேற்றுமாலை 5 மணியளவில் ஏற்பட்ட தீ சுமார் 20 நிமிடங்கள் எரிந்தது எனினும் உடனடியாக வந்த புத்தளம் பிரதேச தீயணைப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.


முறையற்ற மின் இணைப்புக் காரணமாகவே இத் தீவிபத்து இடம் பெற்றுள்ளதாகப் புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தாமதம் ஏற்பட்டிருந்தால் பெருமளவு ஆயுதங்கள் வெடித்துச் சிதறியிருக்குமென பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







புங்குடுதீவு குறிகாட்டுவான்

# ஸ்ரீ ஜெகன்மாதா மனோன்மணி அம்பாள் (பேய்ச்சி அம்மன்) ஆலய

# தேர்த் திருவிழா சிறப்பு மலர் 29.06.2004







## தேர்த்திருவிழா உபயகாரரின் வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு- குறிகாட்டுவான் ஸ்ரீஜெகன்மாதா மனோன்மணி அம்பாள்தேரேறி வருகின்ற அற்புத நாள் இன்று .

சைவமும் தமிழும் மணம் கமழும் புங்குடுதீவு குறி காட்டுவான் பகுதி மக்கள் இறைவன் பால் கொண்ட அளவு கடந்த பக்தியின் வெளிப் பாடாகவும் சைவத் தின்பால் கொண்ட பற்றுறுதியின் குறியீடாகவும், சைவாலயங்கள் எங்கும் எழுச்சி பெற்றுக் காணப்படுகின்றன. இவற்றுக் கெல்லாம் மகுடம்போல் மனோன்மணி அம்பாள் குறிகாட்டுவான் முனையில் வீற்றிருந்து அடியார்வினை தீர்க்கும் அற்புதம் அலாதியானது.

இன்று தேரேறி வரும் ஜெகன்மாதாவின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அன்னையின் பாதம் பணிகின்றோம்.

*தம்பிஐயா கண்ணன் (தேர் உபயகாரர் சார்பாக)*

## மஹோற்சவ பிரதமகுரு ஆலய பிரதமகுரு ஆகியோர் வழங்கிய ஆசிச்செய்தி





பிரபஞ்சத்தின் இயக்கம் இறைவனின் பஞ்சகிருத்தியங்களினால் நடை பெறுகின்றது.

இவ்வாறு பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு மூல காரணமாக இருக்கும் ஐந்தொழிலைக் குறிப்பதே மஹோற்சவமாகும். இதில் தேர்த் திருவிழா என்பது அழித்தல் தொழிலை சுட்டி நிற்கின்றது. ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை இறைவன் சங்காரம் செய்து ஆன்மாவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் தத்துவத்தைக் குறிக்கிற தேர்த் திருவிழாவில் அன்னை மனோன்மணி அம்பாளின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க ஆவலுறுகின்றோம்.

*சதா. சங்கரதாஸ் குருக்கள்* (மஹோற்சவ பிரதம குரு)

*சிவசுப்பிரமணிய ரமேஸ் சர்மா* (ஆலய பிரதம குரு)

## அற்புதங்கள் நிறைந்த ஆலய வரலாறு

புங்குடுதீவு மேற்கில் அமைந்திருக்கும் பருத்தித்தீவு என அழைக்கப்பட்ட குறிகாட்டுவான் எனும் அழகிய தீவில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பேச்சியம்மன் என அழைக்கப்படும் அருள்மிகு அகிலாண்ட நாயகி மனோன்மணி அம்பாள் ஆலயம் பொற்றாலபுலம் திருப்பதியில் அமைந்திருக்கும் இவ்வாலயம் புங்குடுதீவின் மிகப் பழமை வாய்ந்த கோயிலாகும். நீண்ட காலமாக மடஆலயமாக இருந்த இவ் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற வேள்விக் கோயிலாகும். சகல தீவகங்களில் இருந்தும் மக்கள் இக்கோயிலுக்கு வருகை தந்து அம்பாளை தரிசித்து செல்வார்கள். இலங்கையிலேயே அதிகளவில் ஆலயங்களைக் கொண்டுள்ள புங்குடு தீவில் இவ்வாலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. மக்களின் அயராத உழைப்பினால் தேவாலயமாக மாறியுள்ளது.

இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு 1964ஆம் ஆண்டு 17ஆம் திகதி குடமுழுக்கு நடைபெற்று பெருந் திருவிழா நடைபெற்று வந்தது.

1991ஆம் ஆண்டு இடம்பெயர்வுடன் ஆலயம் பூசைகளின்றி 12 ஆண்டுகளாகப் பூட்டப்பட்டுக் கிடந்தது. 12ஆண்டுகளில் இந்த ஆலயத்தைப் பாதுகாத்து வந்த குறிகாட்டுவான் மணியக்கா என்பவரை யாரும் மறந்து விட முடியாது. அவர் இவ்வாலயத்திற்கு ஏற்றிய ஒளி விளக்கு இரவு பகலாக எரிந்து கொண்டிருந்தது. ஆனால் கடற்படையினர் இவ்வாலயத்தின் திருமஞ்சனக் கிணற்றைப் பாவித்து வந்தனர். இதைத் தடுப்பதற்கு அம்பாள் நாகபாம்பாக உருமாறி ஆலயத்துள் குடி புகுந்தாள். அன்றுடன் அவர்கள் ஆலயத்துள் பிரவேசிப்பதை நிறுத்திக் கொண்டார்கள்.

இவ்வாலயம் 2003ஆம் ஆண்டு ஆனி மாதம் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. அன்றிலிருந்து ஆலய பிரதமகுரு சுப்பிரமணிய ரமேஸ்சர்மா அவர்களால் பூசைகள் செய்யப்படுகிறது. 2004ஆம் ஆண்டு ஆனிமாதம் 21ஆம் திகதி கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனி மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 30ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தோற்சவமும் 1ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

பிரமஸ்ரீ கலாநிதி சங்கரதாஸ் குருக்கள் பிரதமகுருவாக இப் பெருந் திருவிழாவை நடத்துகின்றார்.இவ்வழகிய ஊரில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரவும் அவர்களின் நல்வாழ்வுக்கும் அம்பாளின் அருள் வேண்டி நிற்கிறோம்.

*ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபையினர்.*


**புங்குடுதீவு மனோன்மணி அம்பாள் கூடிய விரைவில் சித்திரத் தேரேறி வருவார் என சிறப்புற வாழ்த்துகின்ற வர்த்தகர்கள்**

அம்பாள் ஸ்ரோர்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி, புங்குடுதீவு.
குமரன் மில், பிரதான வீதி, புங்குடுதீவு.
கிந்துசா ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, புங்குடுதீவு.
விஜய் தொலைத் தொடர்பகம்
அன் வீடியோ சென்ரர்
பிரதான வீதி, புங்குடுதீவு.
ஆரணி மில்ஸ்
246 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
சிவன் ஸ்ரோர்ஸ்
118 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ மைதிலி பவான், குறிகாட்டுவான்.
பரமேஸ்வரா உணவகம்
குறிகாட்டுவான்.
மனோன்மணி அம்பாள் உணவகம்
குறிகாட்டுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர்

# திருமதி சகுந்தலாதேவி கனகராசா அவர்களின்

# சேவைநலன் பாராட்டு விழா 29.06.2004

### வயதுக்கு முன் ஓய்வுபெறும் திருமதி எஸ்.கனகராசா அவர்கள் வாழ்வில் மகிழ்ந்திட வாழ்த்துக்கள்



முத்துப்போல் நீர் குதித்திடும் அச்சுவேலி கல்வி உலகில் பல முத்துக்களைக் குவித்துள்ளது. விளைபயிர்களின் சிரிப்பும், துயர்களையும் சிவப்பு நிலமும் அச்சுப்போல் வேலிகள் நிரைக்காத அச்சமற்ற அச்சுவேலி மத்திய கல்லூரி நடப்பியல் வருடங்களில் நல்ல அதிபர்களால் சிலிர்த்தது; செழித்தது; வளர்ந்தது. மயிலிற்கு தோகை போல் துயர் சுமக்காத இன்றைய அதிபர் திருமதி ச.கனகராசா வயதுக்கு முன் சேவையில் ஓய்வு காண்கின்றார். அதிபர் வாழ்வில் கல்லூரியின் உயர்வில் கல்வியில் விழாக்களில் நிமிர்ந்து பணிபுரிந்து அதிபர் சேவையை இன்று நிறுத்துகின்றார். கற்றலில், கற்பித்தலில் கற்றதனால் பெற்ற பட்டங்களில், பதவிகளில் அச்சுவேலி மத்திய கல்லூரி அடைவுகளைத் தொடர்ந்திட அதிபரின் ஓய்வு ஆலாபனை செய்யட்டும்.

*ப. விக்னேஸ்வரன்*
*வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*



**பிறப்பு:** இராசவீதி அச்சுவேலி
**பிறந்த திகதி:** 30-06-1945
**1950** :ஆரம்பக்கல்வி, யா/கைதடி. கிறி.மெ.பாடசாலை
**1961:** க.பொ.த.உயர்தரம்,யா/ அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி
**1965:** பட்டப்படிப்பு (கலை) பேராதனை பல்கலைக்கழகம்

**ஆசிரியர் சேவை**
1970.10.25-1975.02.16 யா/ ஏழாலை மகா வித்தியாலயம்
1975.02.17-1990.12.31 யா /அச்சுவேலி மகாவித்தியாலயம்

**அதிபர் சேவை**
1991.01.01-1993.04.19 யா/ கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்
1993.04.20-1998.03.01 யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
1998.03.01-2004.06.29 யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

### ஓய்வுபெறும் திருமதி எஸ்.கனகராசா அவர்களின் எதிர்காலம் சீரும் சிறப்புற வாழ்த்துக்கள்

தனது 60 வயது எட்டமுன் ஓய்வு பெறும் அதிபர் திருமதி ச.கனகராசா தனதுசேவைக் காலத்தில் கோப்பாய் கோட்ட பாடசாலைகளான சரவண பவானந்தா வித்தியாலயம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்,அச்சுவேலி மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராக நற்சேவையாற்றி ஒரு நல்ல சமூகத்தை எம்மிடையே விட்டுச் செல்லுகின்றார்.அதிபர் என்ற வகையில் ஆளுமையுள்ள சாதிக்கும் திறமை கொண்ட எல்லோரையும் மதித்துப்பழகும் இயல்புள்ள மற்றவரைப் புரிந்து கொள்ளும் உயர் பண்புள்ளம் கொண்ட அவரை வாழ்த்துவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக இதைக் கருதுகின்றேன். ஓய்வுகாலம் சீரும் சிறப்புடன் விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

*இ. சிவஞானசுந்தரம்*
*கோட்டக் கல்வி அதிகாரி, கோப்பாய்.*

### ஆரவாரம் இன்றி அன்பால் ஆளுகை செய்த பெண் அதிபர் பெட்புடன் நீடு வாழ்க!



இலங்கை அதிபர் சேவைக்கு பொருத்தமானவர்களைத் தெரியும் முதலாவது போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்று முதலாம்தர அதிபராகத்தெரியப்பட்ட பெருமைக்குரிய திருமதி ச.கனகராசா ஆரவாரமின்றி அமைதியான நிர்வாக முறைமையொன்றை நடத்தியவர். அச்சுவேலி மகா வித்தியாலயத்தைக் கல்லூரி நிலைக்கு உயர்த்திய பொற்காலத்திற்குரிய முதல்வர். எண்பதுகளில் க.பொ.த உயர்தர ,சா.த. பரீட்சை தமிழ் மதிப்பீட்டாளர் பணிகளின் போது நான் அவரோடு பழகும் வாய்ப்புப் பெற்றவன் . அமைதியான சுபாவமுள்ளவரானாலும், தமக்குத்தரப்படும் பணிகளில் மிக உற்சாகமாக தொழிற்படும் ஆற்றல் மிக்க ஒரு பெண் அதிபராக வலயப் பாடசாலை மட்டத்தில் மதிக்கப்பட்டவர்.

அன்புடன் பேசி அளவளாவும் திருமதி கனகராசாவின் ஆளுமையால் கடந்த ஆண்டுகளில் இக்கல்லூரி பெற்ற நன்மைகள் அதிகம்.பிரார்த்தனை மண்டபம்,கட்டடங்களின் புது மெருகு, கணனித்துறை பிரவேசம் ,உடல் பயிற்சி, மொழித்திறன், போட்டிகளின் வெற்றி, எல்லை விரிவாக்கம் என்பன சில.

தாமேவிரும்பி ஓராண்டுக்கு முன்னரே ஓய்வுபெறும் திருமதி கனகராசா அம்மா தம் மிகுதிவாழ்வில் எதனைச் சாதித்து நிறைவுகாண விரும்பினாரோ அவர் கருதிய நிகழ்வுகள் நன்றே அமையவும், அவர் அவரது கணவனார் பிள்ளைகள் வாழ்வு சிறப்பும் நிறைவும் காணவும் இந் நன்நாளில் அவருக்கு வாழ்த்துக் கூறுவதோடு அவர்சேவை நலனையும் உளமாரப்பாராட்டி அமைகிறேன்.

நன்றி

*'ஆசிரிய மணி' M.S. ஸ்ரீதயாளன் உ.க.ப (தமிழ்) யாழ். வலயம்*

### நல்லாசான்

புத்திஜீவிகள் பலரைத் தோற்றிவித்த அச்சுவேலிப் பகுதியிலே தோன்றி 1970-10-25 அன்று முதல் ஆசிரியராகவும் பின் 1991-01-01 முதல் அதிபராகவும் எம்மாணவர்க்கு கல்விபுகட்டியும் நன் நிர்வாகம் நடத்தியும் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், ஊக்கமும் உதவிகளும் புரிந்து 2004 -6-29 அன்று சேவையிலிருந்து ஓய்வைப் பெறுகிறார். சேவைக்கே ஓய்வேயன்றி மனதிலில்லை எனவே என்றும் உடல்வள உறுதியோடு குடும்பக் கடமைகளை இனிதே நிறைவேற்றி இன்பமுடன் வாழ ஆண்டவன் அருள்தர வேண்டுகிறோம்.

**பழைய மாணவர் சங்கம்**

### தொழிலை நேசித்த உத்தமர்

இப்பாடசாலையின் பழைய மாணவியாகவும் எனது மதிப்புக்குரிய ஆசானும் ஆகிய ஓய்வு பெறும் அதிபர் அவர்களுக்கான சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். கற்பித்தலில் அவருக்கு இணையான ஒரு ஆசிரியரை நான் கண்டதில்லை. எம்மையெல்லாம் உணர்வூட்டிக் கற்பித்து வந்த அந்த காலத்தை இன்றும் பசுமையுடன் நான் நினைவு கூருகின்றேன் .அதிபர் என்ற வகையில் தனது பாடசாலைக்கு எதையோ செய்ய வேண்டுமென்ற இலட்சிய நோக்குடன் செயற்பட்டவர். பலவற்றைச் செய்தும் முடித்துள்ளார்.

"கடமையைச் செய் பயனை எதிர்பாராதே" என்ற கீதையின் வாசகத்துக்கேற்ப பயன்கருதாப் பணியாளர் எங்கள் அதிபர் ஓய்வு காலம் சிறக்க அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க பல்லாண்டு

*திருமதி. உ. பாலசுப்பிரமணியம்*
*ஆரம்பப்பிரிவு பொறுப்பாசிரியர்.*

### பிரதி அதிபரின் உள்ளத்தில் இருந்து...

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவரின் கூற்றிற்கு இணங்க தம் வாழ்வை ஆக்கிக் கொள்பவராக நம்மவர்கள் வாழ்கின்றபோதும் அப்புகழைத் தேடிக் கொள்பவராகவும் புகழே அவர்களைத் தேடி வருவதாகவும் வாழ்கின்றவர் வெகுசிலரே. அச் சிலருள் எமது கல்லூரி அதிபர் அவர்களும் ஒருவர் ஆவார்.

பெண்மைக்குரிய மென்மைப் பண்புகள் நிறைந்திருக்கும் எம் அதிபர். அவர்களிடம் நிர்வாகத்திறன் தலைமைத்துவம் மேலோங்கிக் காணப்பட்டது.எமது கல்லூரியின் வரலாற்றில் வரலாறு படைத்து நிறைந்து நிற்கும் அதிபர்கள் வரிசையில்எமது அதிபர் அவர்களின் வரலாறும் இடம் பிடிக்கும் என்றால் மிகையாகாது.

சிதைந்து கிடந்த காலகட்டத்தில் வித்தியாலயத்தை கல்லூரி ஆக்கிய பெருமையும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வளம் நிறைந்த வகுப்பறைகளையும் அமைப்பதில் அவர் காட்டிய அக்கறையை எம்மால் மறக்கமுடியாது.

தாம் கற்ற கல்லூரியில் ஆசிரியராய் அதிபராய் கடமை ,கண்ணியம் கட்டுப்பாட்டுடன் தம் பணியினை திறம்பட முடித்துக் கொண்டு இன்று சேவை நலம் பாராட்டைபெறும் எமது கல்லூரி அதிபர் அவர்கள் பாராட்டிற்குரியவர். அதிபர் அவர்கள் மேலும் வளங்கள் பலபெற்று தம் குடும்ப உறவினர்களுடன் வளமான வாழ்வைத் தொடர்ந்திட எல்லாம் வல்ல இறைவன் அருள்வேண்டி வாழ்த்துகின்றேன்.

*திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா*
*பிரதி அதிபர்*

### சிறந்த சேவையாளர்

புத்திஜீவிகளையும் நற்பண்பு மிகுந்த கல்வியாளர்களையும் உருவாக்கிய பெருமை எமது கல்லூரி அதிபரைச் சாரும். குறிப்பாக மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலை கட்டுமான பணிகளுக்கும் சிறந்த விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற முயற்சியிலும் தேசிய பாடசாலையாக அச்சுவேலியிலே மிளிர வேண்டும் என்ற முயற்சியிலே உடல், உள உழைப்பை துச்சம் என நினைத்து சேவையாற்றிய அதிபர், சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவரது குடும்பம் சீரும் சிறப்புடன் இருக்க வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம். யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

### பாராட்டி வாழ்த்துகிறோம்

**கல்விக்கு ஒரு கலைமகளாய்**
**கலைமகள் நாவில் நர்த்தனமாட**
**கண்ணியமாய் தன் பதவியினை**
**காத்துவிட்ட நற் தமிழ் அன்னையே**
**கடமையே கண்களாகி தன்னையே**
**கற்பூரமாக ஒளிர விட்டஅதிபரே**

**பாரினிலே பலரும் போற்ற**
**பள்ளியிலேகடமையாற்றி**
**பண்பையே கருத்தாய் கொண்டு**
**பணிமையே கற்றுத் தந்த பெருமகளே**
**பாலர் எம்மை நல்வழிப்படுத்திய**
**பாவையாய் பூத்துவிட்ட பூமகளே**

**சேவையை நீத்துச் செல்லும் அதிபரே**
**வாழ்க வளமுடன் என்றும்**
**இறைவனின் நல்லாசிபெற்று**
**வாழ்க என மனமார அனைவரும்**
**வாழ்த்துகின்றோம்**
**வாழ்க !வாழ்க வாழ்கவே!**

மாணவர்கள்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

### வாழிய நலம் பெற்று

**அன்பும் அறமும் அகத்தினில் கொண்டு**
**அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபராய்**
**ஆளுமை கொண்டு அருமைத்தாய் ஆனவரே**
**இனிவரும் காலங்கள் இனிமையாய்**
**இன்பமாய் இலங்க வாழ்த்துகிறோம்.**
**கல்லூரியின் காவிய நாயகியே**
**கலைவளமும் கட்டட வளமும்**
**காணும் இடமெல்லாம் கவின் வளமும்**
**காணவைத்த தாங்கள் இளைப்பாறும் இந்நாள்**
**ஈரவிழிகள் ஆகும் நாளே**
**அகவை ஐம்பத்தொன்பதுகளில்**
**இளைப்பாறும் இணையில்லாத் தாயே**
**நல்லதிபராய்அகத்தினில் நிறைந்திருந்தீர்**
**அரும்பணிகள் அத்தனையும்**
**அழியாத கோலங்கள்**
**வாழ்க வளமுடன்**

திரு.நா.சண்முகரத்தினம்
பகுதித் தலைவர்,தலைவர்
(ஆசிரியர் கழகம்)

### கல்லூரி தாய்மைக்கு கவினுறு வாழ்த்து

நிலத்தோடு பிறந்து சான்றோர்
நெஞ்சமர்ந் துயர்ந்து மேன்மைப்
புலந்தியல் முற்றும் தந்த
பொதுமறை ஈயும் இன்ப
நலத்தியல் செறிந்த நங்கை
நளிர்மணி தமிழாள் உள்ளக்
கிழத்தியை வணங்கல் செய்வோம்.
கிளர் நலஞ் சிறக்க வென்றே

காவியக் கண்ணன் இன்பக்
கலையுணர் புலவன் செய்த
ஓவியமனைய அன்னை
உளங் கவர்ந்த தெம்முள் நின்ற
ஆவியைக் கல்லூரிக்கு உகந்தளித்த
ஆளுமைத் தமிழாம் மெய்மைத்
தேவியை வணங்கச் செய்வாம்; நீவீர்
திகழ் நலஞ் சிறக்க நீடு வாழ்க

"பண்புடையார் பட்டுண்டு அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

**என்றும் மறவா**
**கல்வி சார சேவையாளர்கள்**

Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### பன்னிரெண்டாம் திருவிழா



## ஆட்கொள்வாயே

மாநிலம் போற்றும் மகாதேவியே
நன்மைகள் பொலிந்திட அருள்வாயே
என்றும் உன்னடி போற்று மடியார்க்கு
ஏற்றம் தந்துமே காத்திடுவாயே

இன்னல் சூழ்ந்த இவ்வேளை தன்னில்
எமக்கு ஒளிதரும் தீபமாய் வந்து
நன்னிலை உயர்ந்து நானிலம் வாழ
அபயம் தந்து ஆட்கொள்வாயே!

இ.இராசையா
கோப்பாய்

## என்றும் இன்பம் தருவாய்

நாயகி நவசக்தி பூஷணி
நயினையின் தவ நாயகியே!
கல்வியின் கலை வாணி
காந்தர்வ ரூபினி தாயே!

மானின் விழி மருட்சியுடன்
மங்கையுமாய் நீ மணித்தீவில்
அருட் கடாச்சம் காட்டியே
தருவாய் இன்பம் என்றும் எமக்கே

நாடிவந்து நாம் வணங்க
நங்கையே நாகபூஷணியே
தந்தே அருள்வாயுந்தன் விழி
அருட் பார்வை எம் மீதும்மா...!

பு.சசிகாந்தன்

## திருவிழா காணவந்தோம்

நயினை நகர் நாடிவந்தோம்
அம்மா நாக பூஷணி
ஆழ்கடலைக் கடந்து வந்தோம்
தாயே நாக பூஷணி
அருள் வதனம் காணவந்தோம்
அம்மா நாக பூஷணி
தாலிவரம் வேண்டி வந்தோம்
தாயே நாக பூஷணி
குழந்தை வரம் தேடிவந்தோம்
அம்மா நாக பூஷணி
பழவினைகள் நீக்க வந்தோம்
தாயே நாக பூஷணி
உன் திருவிழாவைக்காண வந்தோம்
அம்மா நாக பூஷணி!

நயினை விஜயன்

## பக்குவம் ஈகுவாயே!

கார்கண்ட தோகை யதாய்
காசினி களித்தே யாட
சீர்பொலி நயினை தன்னில்
சிறப்புற விளங்கும் தாயே!
மார்பினில் வீர மேந்தும்
மறக்குலம் வாழ, நீதி
பாரினில் என்றும் ஓங்க
பக்குவம் ஈகு வாயே!

சூத்தாடி

# பருத்தித்துறை பேருந்துச் சாலை ஆனைவிழுந்தானுக்கு இடமாற்றம்

(பருத்தித்துறை )

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போ, பருத்தித்துறை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புலோலியிலுள்ள ஆனைவிழுந்தான் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பருத்தித்துறை பிரதேச செயலினால், குழு வொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலரினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விபரங்கள்

ஆலோசகர் எம்.கே சிவாஜிலிங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இணைப்பாளர் எஸ். வசந்தகுமார் (பருத்தித்துறை பிரதேச செயலர்)

தலைவர் வைத்தியகலாநிதி கே.மயிலேறும் பெருமாள் (மாவட்ட வைத்திய அதிகாரி )

செயலாளர் எஸ்.திருச்செல்வம் (பரு.பிரதேசசபை பிரதம நூலகர் )

பொருளாளர் கே.முருகையா (பிரதேச செயலக உத்தியோகத்தர்)

செயற்குழு உறுப்பினர்கள் தீகமலநாதன் (பருத்தித்துறை பஸ்டிப்போ முகாமையாளர்), எம்.பரமேஸ்வரன் (வர்த்தகர்)எம். கணபதிப்பிள்ளை (அதிபர்)எஸ்.சிவசண்முகம். (கிராம உத்தியோகத்தர் கற்கோவளம்,வல்லிபுரம்) ஆர். புலேந்திரன்(கிராம உத்தியோகத்தர் புலோலி வடகிழக்கு) எஸ். வசந்த குமார் (கிராம உத்தியோகத்தர் தும்பளை) வி.செல்லத்துரை (வர்த்தகர்)

இக்குழுவின் கூட்டம் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து குழுவினர் பஸ்டிப்போ மாற்றப்படவுள்ள ஆனை விழுந்தான் பகுதிக்கு சென்று பார்வையிட்டனர்.

(உ-52)

# பாடசாலைக் கல்வியை கைவிட்டவர்கள் பட்டப்படிப்பு மேற்கொள்ள வாய்ப்பு

(கொழும்பு)

வறுமை, பொருளாதாரப்பிரச்சினைகள் காரணமாக பாடசாலையை விட்டு இடைவிலகியவர்களை இலக்காக வைத்து நாடளாவிய ரீதியில் "திறந்த பாடசாலை" முறை ஒன்று நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜெகத் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இத் திறந்த பாடசாலைகளினூடாக பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகியவர்கள் வீட்டிலிருந்தபடியே தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கல்வி பயில்வோரிற்கான பாடநூல்கள் மற்றும் இதுதொடர்பான விடயங்கள் அடங்கிய புத்தகங்கள் கல்வித் திணைக் களத்தினால் விநியோகிக்கப்படவுள்ளதுடன் சம்பிரதாய பூர்வமான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகியவர்கள் சாதாரண தரப் பரீட்சை முதல் பட்டப்படிப்பு வரை பயில்வதற்கு இது வசதியளிக்கும் எனவும் பேராசிரியர் ஜெகத் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா,மலேசியா,கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-2)

# கைதான காவல்துறை வீரர் விடுதலையானார்

(கொழும்பு)

திருகோணமலை மிகுந்தபுரம் இராணுவ காவலரண் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமையன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த வசீகரன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

மூதூரில் இருந்து வெருகல் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறியில் பயணஞ் செய்தமேற்படி காவல்துறை உறுப்பினர் தடை செய்யப்பட்ட தொடர்பாடல் கருவிகளை வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டே கடந்த சனிக்கிழமை படையினரால் கைது செய் யப்பட்டிருந்தார்.

(உ-62,10)

## நினைவுக்கல் திரை நீக்கம்

(பருத்தித்துறை)

கடந்த 28ஆம் திகதி அன்று திருமலைக் கடலில் வீரச்சாவடைந்த லெப்டினன் உத்தமனின் (பொன்னுத்துரை அருமைத்துரை-சண்டில்குளம் கரவெட்டி)மாவீரர் நினைவுக்கல் இன்று வடமராட்சி எல்லன் குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

லெப்டினன் உத்தமனின் திருவுருவப் படம் அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கரவெட்டி நவசக்தி நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா தலைமையில் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

(உ-52)

## பாம்பு தீண்டியது

(கரணவாய்)

பாம்புக்கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த இராசநாயகம் சுரேஸ்கிருஷ்ணா (வயது 15) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

கடந்த சனிக்கிழமை ஆட்டுக்குகுழை வெட்டச்சென்ற சமயம் பாம்பு தீண்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

## உரிமத்தகடு வழங்கல்

பருத்தித்துறை பிரதேச சபை இவ் வாண்டிற்கான சைக்கிள் உரிமத் தகடுகளை வழங்கிவருகின்றது.

இச் சைக்கிள் உரிமத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்குட்படுத்தப்படுவார்கள் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

(உ-52)



அண்மையில் இடம்பெற்ற ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா. சந்திரகாந்தன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் பாடசாலை அதிபர் செ.சிவநடராசா சகிதம் கல்விச் சமூகத்தினரால் வரவேற்று அழைத்துச் செல்லப்படும் காட்சி.



அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி வடக்கு மண்டுவில் ஐங்கரன் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பாலர்களின் அணிவகுப்புக் காட்சியைப் படத்தில் காணலாம்.

(படம்:-சாவகச்சேரி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.பிரதமர் பதவி துறக்க இராணுவ அழுத்தமே காரணம்

## எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் ஜப்ருல்லாகான் ஜமாலி தமது பதவியை இராஜினாமா செய்வதற்கு இராணுவ நிர்ப்பந்தமே காரணம் என்று எதிர் கட்சிகள் கூறியுள்ளன. ஜமாலியின் ராஜிநாமாவால் அரசியல் அமைப்புச் சட்டம் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவை குறிப்பிட்டுள்ளன.



நாட்டில் ஜனநாயகத்துக்கு எதிராக சதி நடந்துள்ளது. தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. என்று முட்டாஹிடா மஜ்லிஸ் -இ அமல் என்ற இஸ்லாமிய கூட்டணி இது குறித்து குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த ஆண்டு முஷாரப் ஆதரவு பெற்ற சர்ச்சைக்கிடமான அரசியல் அமைப்புச் சட்ட சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற உதவியது முட்டாஹிடா மஜ்லிஸ் - இ அமல் (எம்.எம்.எ) இந்தச்சட்டம் நிறைவேற உதவினால் இராணுவத் தலைமைத் தளபதி பதவியிலிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் விலகிவிடுவதாக முஷாரப் கூறியிருந்தார்.

ஜமாலியின் ராஜிநாமாவால் நாட்டில் அரசியலமைப்புச்சட்ட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அமின் ஃபாஹிம் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார அமைப்பு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அரசையும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க விடுவதில்லை என்றும் அவர் கூறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலி சனிக்கிழமை திடீரென தனது பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து இடைக்கால பிரதமராக தனது முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் சுஜத் ஹுசைனை அவர் நியமித்துள்ளார். நேற்று ஹுசைன் முறைப்படி பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் எதிர்கால பிரதமாராக நிதி அமைச்சர் சௌகத் அஜீஸ் நியமிக்கப்படுவார் எனக் கூறப்படுகிறது.

முஷார பின் 3 ஆண்டு இராணுவ அட்சிக்கு பிறகு 2002இல் பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நவம்பரில் ஜமாலி பிரதமராகப் பொறுப்போற்றார்.

ஜமாலி பிரதமராக இருந்த போது அரசு நிர்வாகத்திலும் அரசியலிலும் இராணுவத்தில் தலையீடு இருப்பதாக புகார் கூறப்பட்டது. இதனால் ஜமாலிக்கும் அதிபர் மூஷாரப்புக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின.

பாகிஸ்தானில் திருத்தியமைக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி அதிபர் விரும்பினால் பிரதமரை பதவியில் இருந்து நீக்கவும் நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே ஜமாலிக்கும், அதிபர் முஷாரப்புக்கும் கருத்து வேறுபாடு அதிகரித்து வந்தது. இந் நிலையில் சனிக்கிழமை திடீரென பிரதமர் பதவியை ஜமாலி ராஜிநாமாச் செய்தார். (உ)



1950-ம் ஆண்டில் கொரியப் போர் மூண்டதை நினைவுகூரும் வகையில், வட கொரியத் தலைநகர் பியாங்யாங் நகரில் வெள்ளிக்கிழமை நடந்த பேரணியில், முஷ்டியை உயர்த்தி அமெரிக்காவுக்கு எதிராகக் கோசமிடுகின்றனர் கொரிய மக்கள்.

# உணவுக் கட்டுப்பாடு மூலம் எயிட்சைக் கட்டுப்படுத்தலாம்

## அமெரிக்கர் நம்பிக்கை

(வோஷிங்டன்)

மருந்துகளை ஒதுக்கித்தள்ளி விட்டு உணவு கட்டுப்பாட்டின் மூலம் எய்ட்ஸ் நோய்க்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறார் எய்ட்ஸ் நோயாளி ஒருவர்.

அமெரிக்காவைச் சேர்ந்த டேவிற் என்பவரைகடந்த 1983ஆம் ஆண்டு எச்.ஐ.வி.கிருமி தாக்கியது. இப்போது அவருக்கு வயது 43 கடந்த 21 ஆண்டுகளாக தனது மன உறுதியின் மூலம் எய்ட்ஸ் நோய்க்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்.

எய்ட்ஸ் நோயின் கடுமையான பாதிப்பை தடுக்க மருந்து, மாத்தி ரைகளை எல்லாம் இவர் நம்பவில்லை. அவற்றை ஒதுக்கித்தள்ளிவிட்டு கடுமையான உணவுக் கட்டுப்பாடு மூலம் சாதாரண மனிதரை போல் வாழ்ந்து வருகிறார்.

எய்ட்ஸ்நோயின் பாதிப்பு அவரிடம் அதிகம் இல்லை .எய்ட்ஸ்நோய் தாக்கினால் ஏற்படக்கூடிய எல்லா மதிப்புக்களையும் இவரும் சந்தித்துள்ளார். வீட்டிலும், உறவினர்களும் ஒதுக்கினர். வேலையே பறிபோனது. இருப்பினும் இவர் மட்டும் துவளவில்லை .

1995ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்குச் சென்று எயட்ஸ்நோய்க்கு எதிராக ஆபிரிக்க நாடுகளில் ஐ.நாவின் மூலம் விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறார்.

நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவுகளை சாப்பிடுவதின் மூலம், எய்ட்ஸின் பாதிப்பை தடுக்க முடியும் என்பது இவரது கருத்து தன்னையே அதற்கு உதாரணமாகக் காட்டி எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு உட்சாகம் அளிக்கிறார்.

கடந்த பத்தாண்டுகளில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான தனது நண்பர்கள் பலியானதை கண்கூடாக பார்த்துள்ளதாக கூறும் இவர் உணவு கட்டுப்பாட்டின் மூலம் தனக்கு அந்த நிலமை ஏற்பட வில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். எய்ட்ஸ் பாதிக்கப்பட்டிருந்தாலும் நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்பது இவருடைய விருப்பம்.

தற்போது இவரிடம் இருக்கும் கெட்டபழக்கம் புகைப்பிடிப்பது மட்டும் தான். மற்றபடி நீண்டநாள் வாழ்வதற்கான மற்ற நடைமுறைகள் எல்லாவற்றையும் பின்பற்றி வருவதாக டேவிற் கூறியுள்ளார். இவருக்கு எய்ட்ஸ் பாதிப்பு அதிகம் இல்லாததைக் கண்டு எய்ட்ஸ் ஆராய்ச்சியாளர் இவரிடம் சோதனைகளும் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# அமெரிக்க எதிர்ப்பாளர்கள் ஜெமனில் சுட்டுக்கொலை

(சனா)

ஜெமன் நாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான தகவல்களை பரப்ப, தீவிரவாதத்தை தூண்டும் வகையில் ஈடுபட்டவர்களை பிடிக்கும் போது ஏற்பட்ட மோதலில் ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜெமன் நாட்டின் வடபகுதியிலுள்ள மலைப்பிரதேசங்களில் இராணுவ வீரர்கள் அதிரடித்தேடுதல் நடத்தினர். இது குறித்து ஜெமன் நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் இணையத் தளத்தில் கூறப்பட்டுள்ளதாவது.

அமெரிக்காவுக்கு எதிரான தகவல்களைப்பரப்ப, தீவிரவாதத்தை தூண்டி விடுவதாக ஷியாபிரிவின் தலைவராகச் செயற்படும் ஹுசைன் பட்ருதின் அல்ஹறவுதி மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து, இராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் அல்ஹறவுதியை கைது செய்யச் சென்றனர்.

ஜெமன் நாட்டு இராணுவ வீரர்கள் ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்களுடன் அல் ஹறவுதி அமைப்பைச் சேர்ந்த கிளர்ச்சியா ளர்கள் தங்கியிருந்த மலையைச் சுற்றிவளைத்தனர். நேற்று முன்தினம் நடந்த சண்டையில் அல் ஹறவுதியின் ஆதரவாளர்கள் ஒன்பது பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த ஒருவாரமாக நடந்து வரும் சண்டையில் இது வரை 62 பேர் கொல்லப்பட்டனர். அதில் 7பேர் இராணுவ வீரர்கள் , தீவிரவாதிகள் 68பேர் கைது செய்யப்பட்டனர். (உ)



கனடாவில் ஒரு நபர் சாதனைக்காக 5.5 மீற்றர் கொண்ட சைக்கில் தயாரித்து ஓட்டிக் காட்டுகிறார்.

# அமெரிக்க அதிபரின் ஆசீர்வாதத்துடன் ஐரோ.யூனியனில் துருக்கி அங்கத்துவம்

(அங்காரா)

ஐரோப்பிய யூனியன் அமைப்பில் துருக்கி உறுப்பினராக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மூன்று துருக்கியர் குறித்தும் அவர் விவாதம் நடத்தியுள்ளார்.



நேட்டோ நாடுகளின் இரண்டு நாள் மாநாடு துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது. இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள ஒரே முஸ்லிம் நாடுகள் துருக்கி மட்டுமே. இந்த மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் துருக்கித் தலைவர் அங்காராவிற்கு கடந்த சனிக்கிழமை இரவு மனைவியுடன் சென்றார்.

அவரது வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம், பேரணி நடந்தது. இதனால் அங்கு வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. 13 ஆயிரம் பொலிஸார் பாதுபாப்பு பணியில் ஈடுபட்டனர்.

அங்காராவில் அதிபர்ஜோர்ஜ் புஷ் நவீன துருக்கி குடியரசை உருவாக்கிய முஸ்தபா கமால்நினை விடத்தில் மலரஞ்சலி செலுத்தி னார். துருக்கிப் பிரதமர் தாயிப் எர்டோகன் , அதிபர் அகமது நெக்டெட் செஜர் ஆகியோரையும் அவர் சந்தித்து பேசினார்.பேச்சுவார்த்தையில் ஈராக் நிலவரம் உட்பட பல்வேறு விஷயங்கள் இடம்பெற்றன.

இதேவேளை, ஈராக்கின் வடபகுதியில் 50 இலட்சம் குர்திஷ் இன மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் குர்திஷ்தான் என்ற பேரில் தனி நாடு அமைக்க அங்குள்ள தீவிரவாதிகள் அமைப்பு போராடி வருகிறது. ஈராக்கில் அமெரிக்க படையினருக்கு குர்திஷ் இன மக்கள் உதவியாக உள்ளனர். ஈராக்கில் நிலவும் அரசியல் நிலையில் அவர்களது தனி நாடு கோரிக்கை வலுத்து வருகிறது.

இதேபோல துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் ஒரு கோடியே இருபது லட்சம் குர்திஷ் இன மக்கள் வசிக்கின்றனர். ஈராக்கில் தனி நாடுக்கோரிக்கை வலுத்தால் துருக்கியில் அதன் எதிரொலி இருக்குமென அந்த நாடு அஞ்சுகிறது. இது குறித்து அதிபர் புஷ்ஷுடன் துருக்கித் தலைவர்கள் விவாதித்தனர்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க கூட்டணிப்படையில் துருக்கி இராணுவம் இடம்பெறவில்லை. ஆனால், அமெரிக்காவின் பல பணிகளும் ஒப்பந்தக்காரர்களாக பலதுருக்கியர் உள்ளனர். இந்நிலையில், மூன்று [illegible] கடத்திச் சென்றனர். 72 மணி நேரத்தில் ஈராக்கை விட்டு துருக்கியர்கள் [illegible] மூன்று பேரின் தலைகளைத் துண்டிக்கப் போவதாக மிரட்டி உள்ளனர். இது குறித்தும் அதிபர் ஜோர்ஜ் புஷ் ஷுடன் துருக்கித் தலைவர்கள் பேசியுள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## தி.மு.க., ம.தி.மு.கவுக்கான ஆதரவில் சரிவு

# எதிர்கால தமிழகத்தை 3வது அணியொன்றே தீர்மானிக்கும்

## எதிர்வு கூறுகிறது தமிழகம் கட்சி

தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளையுமே மக்கள் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளனர். ஆதலால், எதிர்காலத்தில் இவ்விரு கட்சிகளைத் தவிர்த்து 3 வது அணிக்கே வாய்ப்புள்ளது என்று புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் கே.கிருஷ்ணசாமி கூறினார்.

புதிய தமிழகம் கட்சியின் இரண்டு நாள் பொதுக் குழுக்கூட்டம் உதகையில் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களுக்கு கடந்த சனிக்கிழமை அவர் அளித்த பேட்டியில்,

தமிழகத்தில் 3 வது அணி என்பது பல முறை முயற்சிக்கப் பட்டுள்ளது. 3வது அணிக்கு 99 ஆம் ஆண்டில் இருந்த வரவேற்பை விட 2004 ஆம் ஆண்டில் வரவேற்பு அதிகரித்துள்ளது. தமிழகத்தில் ஒரு கட்சி ஆதிக்கம் என்பது முடிவுக்கு வந்துவிட்டது.

அதனால் 3வது அணியே எதிர்காலத் தமிழகத்தை நிர்ணயிக்கும் சக்தியாக அமையும். இது வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலேயே நிரூபிக்கப்படும்.


ஜெயலலிதா வெளியிட்டு வரும் அறிவிப்புகள் தொழிலாளர்களுக்கு புதிதாக எதையும் கொடுப்பதாக அமையவில்லை. தான் பறித்த உரிமைகளையே மீண்டும் வழங்கி வருவதால் இதை எதிர்ப்பதற்கோ அல்லது வரவேற்பதற்கோ ஒன்றுமில்லை. தனது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவே ஜெயலலிதா இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

மத்திய, மாநில அரசுகள் எதுவாக இருந்தாலும் தேர்தல் நேரத்தில் கொடுக்கப்படும் எந்த வாக்குறுதியையுமே நிறைவேற்றுவதில்லை. வாக்குகளை பெற்றுக் கொண்டு மக்கள் நலனை மறந்துவிடுகிறார்கள். இத்தகைய நிலை மாறவேண்டும்.

புதிய தமிழகத்தின் ஆட்சி வந்தால்தான் தமிழக மக்களுக்கு ஒரு புதிய விடிவு ஏற்படும். தமிழகத்தில் உள்ள அனைத்து நிலங்களையுமே நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரவேண்டும். இவ்வாறு கைப்பற்றப்படும் நிலங்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு தலா இரண்டரை ஏக்கர் வீதம் பிரித்து குத்தகைக்குக் கொடுக்கவேண்டும்.

தமிழகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் கொத்தடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர். வேலைப்பழு தற்போது இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு சம்பளமும் குறைக்கப்பட்டுள்ளது. 8 மணிநேர வேலை என்பதே இல்லாமல் போய்விட்டது. புதிய தமிழகம் தவிர மற்ற அனைத்துத் தொழிற் சங்கங்களுமே தொழிலாளர்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன. இந்த நிலை வெகு நாட்களுக்கு நீடிக்காது என்றார்.

(உ)



சென்னையை அடுத்த மணலி ரயில்வே கேட் அருகே நின்ற 4 பேரைக் காவல் துறையினர் பிடித்து சோதனையிட்டதில் அவர்களிடம் இருந்து 2 புலித்தோல்களும், மான் கொம்புகளும் கைப்பற்றப்பட்டது. இவற்றின் மதிப்பு 12 இலட்சம் ரூபா என்கிறது காவல்துறை.

## வீரப்பனைத் தேடிய

# அதிரடிப் படையினரைத் துரத்திய காட்டு யானைகள்

தமிழக அதிரடிப்படையினரை காட்டு யானைகள் விரட்டின. இதில் சப் -இன்ஸ்பெக்டர் ஒருவர் காயமடைந்தார். சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழக அதிரடிப்படையினர், கர்நாடக வனப்பகுதியான மரூரில் கடந்த வியாழக்கிழமை தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவர்களை காட்டு யானைகள் துரத்தின. இதில் அதிரடிப்படை சப்-இன்ஸ்பெக்டர் சுபாஷ் மற்றும் 5 வீரர்கள் கீழே விழுந்து, லேசான காயமடைந்தனர். அவர்கள் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(உ)




# இந்தியச் செய்திகள்

## இளந்துறவி விவகாரத்தில் மதுரை ஆதீனம் தலையீடு

இளந்துறவிக்கும், அவரது பெற்றோருக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க சேலம் வருவதாகத் தெரிவித்தள்ளார் மதுரை ஆதீன கர்த்தர். இளந்துறவி ஹரிபரணிதர ராகவேந்திரருக்கும் அவரது பெற்றோருக்கும் இடையே உள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண தயாராக இருப்பதாக மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் தங்கியிருந்த என்னிடம் ஒருமுறை இளந்துறவி பரணிதரன் சந்தித்து ஆசிபெற்றுச் சென்றார். அவனுடைய ஆன்மீகப் பணிக்கு யாரும் இடையூறு செய்யக் கூடாது. அவரது பெற்றோர் துணை நிற்கவேண்டும்.

பெற்றோருடன் அவருக்கு ஏற்பட்டுள்ள மனக்கசப்பைத் தீர்த்து வைக்க சேலம் வருவேன் என்று மதுரை ஆதீனத்திற்குத் தெரிவித்துள்ளார். இது பற்றி ஹரிராகவேந்திர பரணிதரன் கூறும்போது,

எனக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலை தீர்ப்பதற்காக மதுரை ஆதீனம் சேலம் வருவதாகக் கூறியுள்ளார். அவர் சேலம் வரும் நாளை ஆவலுடன் எதிர் நோக்கியுள்ளேன் என்றார்.

சேலம் தருமபுரி மாவட்ட எல்லையான தொப்பூர் அருகேயுள்ள ஈசல்பட்டி பகுதிக்கு இளந்



துறவி கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்று சிறப்புப் பூசை நடத்தி ஒரு மரக்கன்றை நட்டார். தொடர்ந்து அவரது சீடர்கள், பக்தர்கள் மூலம் 100 க்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் நடப்பட்டன. (உ)

## ஜனாதிபதி நிதியம் மூலம்

# 700 கோடி ரூபா பெறுமதியான சேமநலன் திட்டங்கள் அமுல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி நிதியம் கடந்த 10 ஆண்டுகளில் மக்களுக்கு அளப்பரியசேவைகளை வழங்கியுள்ளதாக நிதியத்தின் செயலாளர் சித்திரா அஸ்துருகிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்த நிதியத்திலிருந்து சுமார் 700 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டுக்கு முந்திய 17 வருட முன்னைய அரசின் காலத்தில் உதவியாக 150 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக நிதியத்தின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிதியத்திலிருந்து கல்வி, சுகாதாரம், சமயம், விளையாட்டு உட்பட ஏனைய பொது நல சேம நல சேவைகள் ஆகியவற்றுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. மற்றும் இருதய சத்திர சிகிச்சை, சிறுநீர் சத்திர சிகிச்சை ஆகியவற்றுக்கும் உதவியுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதி மக்களின் சேமநலன்களுக்கும் இந்த நிதியத்திலிருந்து உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி யுத்த சூழ் நிலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# அரச ஊடகங்கள் மீது பீரிஸ் மானநட்ட வழக்கு

(கொழும்பு)

அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியை சட்டத்திற்கு முரணாக கொள்வனவு செய்ய முயன்றதாக தன்மீது குற்றஞ் சாட்டப்பட்டதால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது எனவும் இதற்காக அரச ஊடகம் தனக்கு பல மில்லியன் நட்ட ஈடு வழங்கவேண்டுமெனவும் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதாவது ஒரு ஏக்கருக்கு 6 ஆயிரத்து 92 ரூபா வீதமும் ஒரு பேர்ச்சிற்கு 38 ரூபா வீதமும் வழங்கி பீரிஸ் மெரகொட என்னும் இடத்தில் 20 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்தார் என்பதே இவர் மீதான குற்றச்சாட்டு.

இதற்காக பீரிஸ் ரூபவாஹினி கூட்டுத்தாபனம், டெயிலி நியூஸ் பத்திரிகை ஆகியவற்றுக்கெதிராக தவறான செய்தி பரப்பியமைக்காக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

தொலைக்காட்சிச் செய்தியின்படி பீரிஸ் சட்டவிரோதமாக காணிகள் சட்டசீர்திருத்த விதிகளுக்கு அப்பால் அதிகாரிகளைத் தவறாகப் பயன்படுத்தி இவ்வாறான மோசடித்தனத்தைப் புரிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ள பீரிஸ் ஊடகங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பாக தன்னிடம் அது பற்றி விசாரிக்காமல் பிழையான செய்திகளை வழங்கியுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (உ-6)

## சமாதான முயற்சிகள்

# ஸ்தம்பிதமடைந்தமை பற்றி அரசுக்கு இரு அறிக்கைகள்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித நிலை அடைந்தமை பற்றிய இரு அறிக்கைகள் நோர்வே அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக [illegible] தானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் அறிக்கையையொன்றும் அரச சமாதான செயலகத்தின் அறிக்கையொன்றுமே இவ்வாறு நோர்வே அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்று கொழும்பை வந்தடைந்த நோர்வேயின் விசேட சமாதா[illegible] ...ளை ாக இந்த அறிக்கைகள் நோர்வே அரசிடம் சமர்பிக்கப்படவுள்ளன. (உ-60,10)

## இலங்கையின் சமாதான முயற்சி பற்றி

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கு விளக்கிக் கூறுவார்

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அடுத்த வாரமளவில் இந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இவர் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான தீர்மானத்தை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வெளியிடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-60,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியைக் குடிக்கும் கொக்கிப்புழுக்கள்!

## மருத்துவ விளக்கம்

கொக்கிப் புழுவானது வாயில் கொக்கிகளையுடைய உருண்டைப் புழுவாகும். இது சிறு குடலில் வசிக்கின்றது.

இந்தக் கொக்கிப் புழுக்கள் சிறுகுடலிலுள்ள சளிச் சவ்வுகளில் உள்ள இரத்த நாளங்களில்,




கொக்கிகள் நிறைந்த தங்களது வாயாலும் கூர்மையான பற்களாலும் கீறல்களை ஏற்படுத்துகின்றன.

கொக்கிப் புழுக்களின் தோற்றம் எவ்வாறு அமைந்துள்ளது என்று பார்ப்போமானால், அவைகள் ஒல்லியாகவும் சிறியனவாயும் காணப்படுகின்றன. பெண் புழுக்கள் ஆண் புழுக்களைவிட நீண்டு காணப்படுகின்றன.

### தொற்றும் விதம்

அசுத்தமான மண் தரையில் சிறு புழுக்கள் வாழ்கின்றன. வெறுங் காலால் இத் தரைகளில் நடக்கும் போது அவை பற்றிக்கொள்கின்றன.

கொக்கிப் புழுவின் முட்டைகள் மலத்தோடு வெளியேறி ஈரப்பதமும் வெப்பமும் நிறைந்த மணல் பகுதிகளில் தங்கி, புழுக்களாக வெளிவருகின்றன. இளம் புழுக்கள் தரையின் மேற் பகுதியை அடைகின்றன. காலணியற்ற கால்களில் அல்லது வெறுமையான கைகளில், இந்தப் புழுக்கள் தோல் மூலமாக நுழைந்து, இரத்த நாளங்களை அடைந்து, அவைகளின் வழியாக நுரையீரல்களை அடைகின்றன. இவை மிக மிகச் சிறியனவாக இருப்பதால் கண்களுக்குத் தெரிவதில்லை.

இந்த இளம் புழுக்கள் இறுதியில் தொண்டையையடைந்து ஆகாரம் விழுங்கப்படும் போது அத்துடன் சேர்ந்து பிரயாணம் பண்ணி இறுதியில் குடலை அடைகின்றன. அங்கே தான் முழுமையான வளர்ச்சியைப் பெறுகின்றன. ஒரு நபரின் உடலில் சுமார் நலாயிரம் புழுக்களுக்கு மேல் காணப்படலாம்.

### அறிகுறிகள்

ஒரு சில புழுக்களே உடலில் தங்கியிருக்குமானால், எத்தகைய நோய்க்குறிகளும் காணப்படுவதில்லை. ஆனால் பொதுவாக கொக்கிப்புழு தொற்றியிருக்குமானால் முகம் வெளுத்துக் காணும், எடை குறையும், உற்சாகமின்றி சோம்பேறித்தனம் தலைதூக்கும். தொற்று கடுமையாக இருக்குமானால் பாதங்கள் இரண்டிலுமோ அல்லது உடம்பு முழுவதுமோ வீக்கம் உண்டாகும். கடுமையான சோகை நோய்க்கு ஆளாக நேரிடும்.

வளரும் பிள்ளைகளுக்கு மன வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் கணிசமான அளவில் குன்றிப் போகும்.

கடுமையான தொற்றுக்கு ஆளானவர் புழுக்கள் உடலை விட்டு வெளியேற்றப்பட்டாலொழிய நீண்ட நாட்கள் உலகில் வாழ முடியாது.

### சிகிச்சை முறை

கொக்கிப் புழுக்களை வெளியேற்ற வேண்டுமானால் tetra chloroethylene கொடுக்கப்பட வேண்டும். இந்த சிகிச்சை ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மதுபானங்கள் குடிப்பதையும் கொழுப்பு, அல்லது எண்ணெய் மற்றும் பால் முதலியவை கலந்து செய்யப்பட்ட ஆகாரப் பொருட்களையும் தவிர்க்க வேண்டும். சிகிச்சைக்கு முந்தின இரவில் மிகக்குறைவாக எளிய ஆகாரம் எடுக்கப்படவேண்டும். காலையில் ஆகாரம் உண்ணாமல் வெறும் வயிற்றில் டெட்ராகுளோறோதைலீனை எடுக்க வேண்டும். மலம் வெளியேறும் வரை படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டும். முதல் சிகிச்சைக்குப் பின் மூன்று வாரங்களுக்கு இந்த சிகிச்சை எடுக்கப்படக்கூடாது.

இந்த டெட்ராகுளோறோதைலீன் கொடுக்கப்படுமுன்னர் குறிப்பிட்ட நபரின் மலம் சோதிக்கப்பட்டு அவருக்கு உருண்டைப் புழுத் தொற்றும் இருக்கிறதாவெனக் கண்டறிய வேண்டும். உருண்டைப் புழுத்தொற்று இருக்குமானால் முதலில் அதற்கான சிகிச்சை கொடுக்கப்பட்டு அது வெளியேற்றப்படவேண்டும். உருண்டைப் புழுவை வெளியேற்றும் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்திற்குப் பின்னரே கொக்கிப் புழுவை வெளியேற்றக் கூடிய சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும்.

**டாக்டர் K.ராஜ்குமார்**

இந்த டெட்ராகுளோறோதைலீன் சிகிச்சை டாக்டரின் மேற்பார்வையின் கீழ் மாத்திரமே கொடுக்கப்படவேண்டும்.

### உணவு முறை

நோயாளி அயன், விட்டமின்கள், புரதங்கள் நிறைந்த ஊட்டச் சத்துள்ள உணவை உண்பாரானால் சீக்கிரத்தில் குணமடைந்து தேற முடியும்.

கொக்கிப்புழுத் தொற்றை எவ்வாறு தடுக்கலாம்? தற்காலத்தில் கட்டப்பட்டிருக்கும் நவீன கழிவறைகளை மக்கள் பயன்படுத்தினால் இந்தத் தொற்றை ஒழித்துக் கட்டிவிடலாம். வெளியே நடந்து செல்லும்போது காலணிகளைத் தவறாமல் அணிந்து செல்ல வேண்டும்.

# மாணிக்க கங்கையில் மூழ்கி இருவர் மரணம்

(நுவரெலியா)

மாணிக்க கங்கையில் குளிக்கச் சென்ற இருவர் நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நுவரெலியாவில் இருந்து சென்று புத்தளவில் உள்ள தமது உறவினர் வீட்டில் தங்கியிருந்த இவ் இருவரும் வேக்கட பிரதேசத்தை ஊடறுத்துப்பாயும் மாணிக்க கங்கைப்பகுதியில் குளிக்கச் சென்ற போதே நீருள் மூழ்கி உயிரிழந்திருப்பதாகத் தெரியவருகிறது.

(உ-4,64)

# பஸ் விபத்தில் ஒருவர் பலி

(அம்பாறை)

அம்பாறை தமணா எக்கல் லோயாப் பிரதேசத்தில் ஏற்பட்ட பஸ்விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை அம்பலாங்கொடையிலிருந்து அம்பாறை நோக்கிச் சென்ற மேற்படி தனியார் பஸ் குடைசாய்ந்ததிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (உ-2)

# பொலிஸ் படைக்கு 12 ஆயிரம் பேர் சேர்ப்பு

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் படைக்கு மேலும், 12 ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறிவிக்கவுள்ளது. தற்போது பொலிஸ் படையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நீக்குமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

# தமிழரின் மீட்சிக்கும் விடியலுக்கும் யாழ். இந்து இரட்டிப்புப் பங்காற்ற வேண்டும்

## வைத்திய நிபுணர் ஜோதிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

துன்பத்திலும் துயரத்திலும் தாங்கொண்ணாத கொடுமையிலும் நம் மண்ணில் துவண்டு கிடந்த நமது தமிழ்ச் சமூகம் மீட்சிக்கும் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் ஆவலோடு காத்து நிற்கின்றது. இப்போது மீட்சிக்கான விடியலில் காத்திருக்கும் நமது இனத்துக்குரிய சமூக வழிகாட்டலை வழங்குவது யாழ்.இந்துக் கல்லூரியின் பொறுப்பும் கடமையும் இரட்டிப்பாகின்றது. அது வரலாற்றுக் கடமையும் கூட.

இவ்வாறு லண்டனில் பணியாற்றும் பிரபல வைத்திய ஆலோசனை நிபுணரான டாக்டர் சபாலிங்கம், ஜோதிலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசு தினவிழாவில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் டாக்டர் ஜோதிலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது,

தமிழ் இனம் சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் நமது மண்ணில் ஆவலோடு காத்திருக்கும் இவ் வேளையில் கௌரவத்துடன் கூடிய அமைதித் தீர்வும் சமாதான வாழ்வும் கிட்டுவதற்கான ஒளிக்கீற்று தென்படத் தொடங்கியுள்ளது.

தனித்தேசியம், சமுதாயம் என்ற கட்டமைப்பிலே கல்லூரி என்ற தனி அலகு முக்கியத்துவம் பெறுகின்றது. சீரிய சமூக வாய்ப்பை நெறிப்படுத்தும்' அடிப்படை வழிகாட்டு நிறுவனங்களில் முதன்மை பெற்றிருப்பவை கல்விச் சாலைகளேயாகும்.

அன்றைய எம் நாட்டு சிந்தனையாளர்கள், சமூக சிற்பிகள் 1890 ஆம் ஆண்டு இந்துக் கல்லூரியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டதன் பயனாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனக்கு நிகர் தானே என்ற கலைப்பயில் கழகமாக உருவான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஈழத்தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியமான அளப்பரிய பங்களித்து வருகிறது.

தமிழனத்துக்கே உரிய சைவ கலாசாரங்களையும், பண் பாட்டு விழுமியங்களையும் நம் மாணவர் மனதிற் பதித்து சமூகத் தில் பொறுப்பு வாய்ந்த சிந்தனையாளர்களை, வழிகாட்டிகளை, விற்பனர்களை, நிபுணர்களை உயர் நிலை வகிக்க ஏற்ற ஆற்றலும், திறமையும் உடையவராக வழிகாட்டிய பெருமையுடன் தமிழர் தலைநிமிர் கழகமாக இன்றும் என்றும் யாழ்.இந்துக் கல்லூரி காட்சிதருகின்றது.

இந்து அன்னை வளர்த்தெடுத்த மைந்தர்கள் தாம் புலம் பெயர்ந்த நாடுகளிலும் கல்லூரியின் அபிவிருத்தி என்ற சமூக சிந்தனையை நோக்கமாகக் கொண்டு காலம் காலமாக வளர்ந்து வரும் மாபெரும் விருட்சத்தின் விழுதுகளாக பழைய மாணவர் சங்கங்கள் அமைத்துச் செயற்படுகின்றனர்.

# மனவளர்ச்சி குன்றிய மாணவர்க்கான சிவபூமி பாடசாலை திறப்புவிழா வெள்ளியன்று

(யாழ்ப்பாணம்)

மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்காக கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள 'சிவபூமி பாடசாலை' எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

சைவ சமயத்தின் பேரில் சைவ அன்பர்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இப் பாடசாலையை சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் இப் பாடசாலையை உருவாக்குவதற்கென லண்டன், கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்று அன்பர்கள் பலரின் உதவியைப் பெற்றதை அடுத்தே விரைவில் இது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் மனவளர்ச்சி குன்றிய 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இப் பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்களை பாடசாலை அதிபர் திருமதி சண்முகராஜாவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கென நீண்டகாலமாகச் சிறந்த பாடசாலையொன்று இங்கு இயங்காமையை அடுத்து, நவீன முறையில் இப் பாடசாலை அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளதுடன் இங்கு கற்பிப்பதற்காக விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# வெற்று வார்த்தைகளைக் கூறி ஜே.வி.பி. மக்களை ஏமாற்றிவிட்டது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்தவுடன் புதிய அரசியல் கலாசாரத்தை நாட்டில் அறிமுகம் செய்வோம் என தேர்தல் காலத்தில் கூறிவந்த ஜே.பி.யினர் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றையும் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது.

நாட்டில் அரசியலில் ஸ்திரத்தன்மையை நிலை நாட்டப் போவதாகவும் ஊழல்களை ஒழித்துக் கட்டப் போவதாகவும் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பியினரும் அவர்கள் சார்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தற்பொழுது தமக்குள்ள அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஊழல்களையும் மோசடிகளையும் புரிந்து வருகின்றன.

ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தனது பிள்ளையைப் பாடசாலை ஒன்றில் முறைகேடான விதத்தில் இணைக்க முயன்றமை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும் அவர் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-4,60)


உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன்-05



எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருளியல்
மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ
விடுதலைப்புலிகள் தமிழீழம்

World Environment Day- June-05

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

உலகின் பெருநகரங்களில் நான்கில் மூன்று பங்கு கடலை அண்மித்தே இருக்கின்றன. உலக சனத்தொகையில் 40 சதவீதமானவர்கள் கடற்கரையில் இருந்து 60 கிலோ மீற்றர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**தமிழ்மொழியும் இலக்கியமும் II**

மணி - 3

ஆக்கம் :
*திருமதி அ.பாலகிருஷ்ணராஜா* (B.A)
ஆசிரியர் யா/நவாலி மகாவித்தியாலயம்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கமிடுக.

(அ) வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும். இதற்குப் பெரிதும் உதவுவன நூல் நிலையங்களே. இவை அளப்பரிய அறிவுப் பொக்கிஷம். மனிதனுக்குத் தேவையான கலை, பண்பாடு, சமய வழிபாட்டு முறைகள், விஞ்ஞானம், இலக்கியம் சம்பந்தமான அறிவை அள்ளி வழங்குகின்றன. இந்நூல் நிலையத்தில் தேடுவாரற்றுக் கிடக்கும் நூலொன்று வாசகர்களுக்குத் தன்கதை கூறும் வகையில் கட்டுரை ஒன்று எழுதுக.

(ஆ) நாம் முயற்சியுடையவர்களாக வாழ்வோமாயின் எந்தச் செயலையும் இலகுவில் நிறைவு செய்து திருப்தியடைய முடியும். நாம் முயற்சியே இல்லாதிருப்போமாயின் எடுத்த கருமம் யாவற்றிலும் தோல்வி பெறுவது நிச்சயம் என்பதை விளக்கும் வகையில் முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதுக.

(இ) இன்றைய தமிழ்த் திரைப்படங்கள் சில நல்ல செய்திகளைத் தருகின்ற அதேவேளை நாகரீகமோகம் என்ற போர்வையில் எமது பண்பாடானது சிதைந்து செல்கின்றமைக்குக் காரணமாகவும் அமைந்துவிடுகின்றன. இந்த வகையில் "இற்றைக் காலத்திலே தமிழ்த் திரைப்படங்களினால் ஏற்படும் சமுதாயச் சீரழிவுகள்'' என்ற பொருள்படக் கட்டுரை எழுதுக.

(ஈ) இயற்கை அன்னை எமக்கு இன்பக் காட்சிகள் பலவற்றைத் தந்து எம்மை மகிழ்விக்கின்றாள். இவற்றுள் ஒன்று பற்றி வர்ணனைக் கட்டுரை எழுதுக.

(30 புள்ளிகள்)

2.
கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக்கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

(அ) எல்லோருக்கும் மிகவும் அவசியமானது பொறுமையைக் கடைப்பிடித்தல் ஆகும். பொறுமையை இழப்போமாயின் பல விபரீத விளைவுகளை அனுபவிக்க வேண்டிவரும். இவ்விபரீதங்களைத் தவிர்க்கவேண்டுமாயின் நாம் பொறுமையைக் கடைப்பிடித்து வாழப்பழகிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வு காணமுடியும். இதனாலேதான் வள்ளுவப் பெருந்தகையும் "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்று பொறுமை பற்றிப் பாடியுள்ளார். இதே கருத்தை வலியுறுத்துவதாவது "பொறுத்தார் பூமி ஆள்வார் பொங்கினார் காடாள்வார்'' என்ற பழமொழியும் இலங்குகின்றது.

(ஆ) நாலடியார், யானை போன்றவர் நட்பு, நாய் போன்றவர் நட்பு என இருவகை நட்பைப் பற்றிக் கூறுகின்றது. யானை அறிந்தறிந்தும் பழகிய பாகனையே கொல்லுமளவிற்கு நன்றியுணர்வு அற்றது. நம்பத்தகாதது. இதைப்போன்று யானை போன்றவர் எவ்வளவு நெருங்கிப் பழகி நன்மை செய்திருந்தும் ஒரு குற்றம் நேர்ந்தபோது அதைப் பெரிதாக்கித் தீங்கு செய்யத்துணிவர். நாய் நன்றி மறவாது. சிலநாள் அன்புடன் உணவிட்டுக் காத்தவர் தன்மேல் வேலெறிந்து புண்படுத்தினாலும் அவரைக் கண்டு வாலையாட்டும். இதைப்போன்று நாய் போன்ற நண்பரும் செய் நன்றியை நினைத்துப் போற்றி அன்பு காட்டுவர்.

(இ) விளம்பரக்கல்லயானது மிகவும் பழமை வாய்ந்ததொன்றாகும். மக்கள் எழுத, வாசிக்க அறிந்துகொண்டது முதல் விளம்பரக்கலை சக்திவாய்ந்ததொரு கலையாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. விளம்பரக்கலை முக்கியமாக வியாபாரத்துடன் தொடர்புடையதாகும். வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்கமாக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. நுகர்வுப் பொருட்களின் பல்வகைத் தன்மை, நுகர்வோர் விருப்பும், பொருளாதார நிலையும் பலவகைப்படுவதாலும் விளம்பரம் செய்தல் இன்றியமையாததாகும். இதற்கேற்றவாறு கவர்ச்சியாக விளம்பரம் செய்வதற்குப் பெரிய வர்த்தக நிலையங்கள் தொழிலாளரை வேலைக்கமர்த்தி உள்ளனர். எனவே "விளம்பரமின்றேல் வியாபரமில்லை'' என்று கூறுமளவிற்கு விளம்பரக்கலை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(ஈ) இலக்கியவகைகளுள் பிரதானமானது நாடகமாகும். இது பா அல்லது உரைநடை ஆகிய வடிவங்களில் காணப்படும். இற்றைக் காலத்தில் மக்களுக்கு இலகுவில் விளங்கத்தக்க உரைநடையிலே பெரும்பாலும் ஆக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில படிப்பதற்கு மட்டுமுரியன. வேறுசில மேடை அனுபவத்தை மட்டும் கொண்டு எழுதப்படுகின்றன. இன்னும் சில நாடகங்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஒருங்கே உரியனவாகக் காணப்படுகின்றன. இவ்வகையான நாடகங்கள் கலைச்சிறப்புடையனவாக மிளிர்கின்றன. இவை பார்வையாளர்களது உள்ளங்களைத் தூண்டி உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உள்ளத்தில் புதைந்திருக்கும் வேட்கைகளுக்கு விடுதலையளித்து மக்கள் மனங்களைப் பண்படுத்தும் மகத்தான பணிகளைச் செய்கின்றன.

(20 புள்ளிகள்)

3.
பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

பிறப்புக்களுள் உயர்ந்தது மானிடப் பிறப்பாகும். அது பகுத்தறிவுடைய பிறப்பு. ஆதலால், ஒவ்வொருவரும் அதன் சிறப்பினை உணர்ந்து நடத்தல் வேண்டும். சோற்றுக்குக் கேடாகவும் பூமிக்குப் பாரமாகவும் இருத்தல் இழிவு. தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுதல் சிறப்பு. ஈகை என்பது கொடுத்தல். அதாவது தன்னால் இயன்றதைப் பிறருக்கு அளித்தல். "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'' என்று வள்ளுவரும் "ஐயமிட்டுண்'' என்று ஔவையாரும் கூறுவதை நோக்குக. பிறருக்குப் பயன்பட வாழ்வோரே போற்றப்படுவர். இங்ஙனம் இருக்கவும் ஒருவர் கொடுப்பதை மற்றவர் தடுக்கும் வழக்கமும் உள்ளது. கொடுப்பதை ஏன் தடுக்கிறீர்கள் என்றால்! உள்ள பொருளைப் பாதுகாக்காது கொடுப்பதால் ஏழையாக நேரிடும் என்பர் தாங்களும் கொடுக்காமல் பிறர் கொடுப்பதையுமா தடுப்பது? அவ்வாறு தடுப்பவர்களை பார்த்துத்தான் "ஈவது விலக்கேல்'' என்று ஔவையார் கூறியுள்ளார்.

(1) இதை எழுதியவரின் குறிக்கோள் யாது?
(2) இதை எழுதியவர் தமது கருத்தினை வலியுறுத்த எவற்றைக் கையாண்டுள்ளார்?
(3) இப்பகுதியில் கூறப்பட்டுள்ள ஔவையார் கூற்றுக்கள் [illegible] என்ன கூறுவீர்?
(4) ஔவையார் "ஈவது விலக்கேல்" என்று கூறியமைக்குக் காரணம் யாது?
(5) இப்பகுதியில் இழிவாகவும் சிறப்பாகவும் குறிப்பிடுவன யாவை? (15 புள்ளிகள்)

4)
பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் என உம்மை கருதி, உமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூட வசதியின்மையைக் கருத்தில் கொண்டு எவ்வாறு இவ்வாய்வு கூடத்தைச் சீரமைப்புச் செய்யலாம் என்பது பற்றிப் பாடசாலை அதிபருக்கு ஒரு அறிக்கை எழுதுக. (15 புள்ளிகள்)

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

2 மணித்தியாலம்

1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக?

1. அ) "நீங்கள் வருந்த வேண்டாம் உங்கள் நற்பண்புகளால் நம் நாடே பெருமை பெறுகின்றது"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iv) இங்கு குறிப்பிடப்படும் 'நற்பண்புகள்' எவை?

ஆ) "நீ மயங்கல் அறத்தை நினை"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iv) இங்கு 'நீ' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

இ) "அமுதசுரபியைக் கொண்டு மக்களுடைய பசிப்பிணியைப் போக்குவாயாக''
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iv) அமுதசுரபியின் தன்மை யாது?

ஈ) "இணையிலாதாரை ஈண்ட அமுது செய்விப்போம்"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) இணையிலாதார் என்பதன் பொருள் யாது?
   (iv) இத் தொடர் உணர்த்தி நிற்கும் பண்பு யாது?

உ) "நாளும் வேதம் ஓதும் முனிவர்களின் நலத்திற்கு எவ்வித குறையும் ஏற்படுவதில்லை''
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) இக்கூற்றில் உணர்த்தப்படும் முனிவர்?
   (iv) வேதம் என்பதன் ஒத்த பொருள் யாது? (5x5 = 25 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்- தொல்லுலகில்
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை**

(ஆ) இந்திரன் செம்மல் பண்டு ஓர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள் களோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தனன், தேவர் உன்ன
**மந்திரக் கிரியால் வேலை**
**கலக்கினான், மைந்தன் என்றான்**

(இ) வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியினாலே
**"அழிவுறும் ஐயன்" என்னும் அன்பினிற் பொலிந்து சென்று**
குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க

(ஈ) செற்செவி யுணர்ந்து புந்தி தெளிவிலன் படுபாடுன்னா
தற்செறி மனத்திற் கொண்ட வயிரத்தா லறையு நின்றன்
**றற்செறி யினறவ னாவித் தாவியென் சரமே யுண்ட**
**திற்செறிந் துற்றேன் பின்னர் சரதமீ தென்று சொற்றான்**

(உ) எண்ணருந் துயர்க்கெலா மிறுதி காட்டுமெய்ப்
புண்ணிய முருக்கொடு பொலிந்தி லங்கிய
**வண்ணமென் றுணர்வுளார் மனங்க ளிப்புற**
**நண்ணின னிருஞ்சுவி சேஷ நாமத்தான்.** (5x 5=25 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.
அ) சேக்கிழாரும் கம்பரும் குறிப்பிடும் தாழ்ந்த உவமை பற்றி விளக்கி எழுதுக.
ஆ) நமுறூதின் படைகள் போருக்கு எழுந்தமையை புலவர் எவ்வாறு வர்ணிக்கின்றார்?
இ) பீஜித் தீவின் கரும்புத் தோட்டத்திலே பெண்கள் படும் அவலங்களை விபரிக்க.
(15புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக.
(அ) இளையான்குடிமாற நாயனாரின் அறத்தின் சிறப்பை விளக்கி எழுதுக.
(ஆ) காவியத் தலைவி கதீஜா நாயகியின் குணப்பண்புகளைத் தருக.
(இ) மழைப்பாட்டில் ஆங்காங்கே உவமைச் சுவையானது ஊடுருவி நிற்கின்றது என்பதை ஆராய்க. (15 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.**

5.(அ) லோகதாசன் அரவந்தீண்டி இறந்த போது சந்திரமதி அடைந்த அவலத்தை விபரிக்க.
(ஆ) சத்திய விரதங்காத்த அரிச்சந்திர மன்னனது குணவியல்புகளைத் தருக. (20புள்ளிகள்)

6. அ) அங்கதன் இராமனது சிறந்த தூதுவனாக விளங்கினான் என்பதை நிரூபிக்க.
ஆ) அந்தோக்கிழவி தேவகிருபையை முன்னிட்டு வாழ்ந்தாள் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

7. அ) மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு கே.கணேஷ் அவர்கள் செய்த பங்களிப்புப்பற்றிக் குறிப்பிடுக.
ஆ) ஔவையார் மூன்றாவது பொற்கிழி அறுந்து விழுவதற்காகப் பாடிய பாடலின் பொருளைத் தருக.

### பகுதி I விடைகள்

| வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|
| 1. | (1) | 21. | (4) |
| 2. | (2) | 22. | (2) |
| 3 | (1). | 23. | (1) |
| 4. | (2) | 24. | (3) |
| 5. | (4) | 25. | (4) |
| 6. | (3) | 26. | (4) |
| 7. | (2) | 27. | (2) |
| 8. | (4) | 28. | (4) |
| 9. | (3) | 29. | (2) |
| 10. | (2) | 30. | (4) |
| 11. | (2) | 31. | (1) |
| 12. | (4) | 32. | (3) |
| 13. | (2) | 33. | (3) |
| 14. | (1) | 34. | (4) |
| 15. | (4) | 35. | (4) |
| 16. | (3) | 36. | (2) |
| 17. | (3) | 37. | (3) |
| 18. | (2) | 38. | (3) |
| 19. | (3) | 39. | (3) |
| 20. | (3) | 40. | (1) |

வியாழன் கணிதம் பகுதி -I வினாக்கள் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோக் கிண்ண்ணம்-2004

# செக். உற்சாக ஆட்டம்

# டென்மார்க் தள்ளாட்டம்

1976ஆம் ஆண்டிற்குப்பிறகு மீண்டும் ஐரோப்பாக் கால்பந்து சம்பியன் பட்டத்தை வெல்லக்கூடிய திறமை எங்களிடம் உள்ளது என்பதை நிரூபிப்பது போல பலம் வாய்ந்த டென்மாரக்



அணியை 3கோல்கள் போட்டு வீழ்த்தியுள்ளது செக்.கோஸ்லோவாகியா

ஆட்டத்தின் முதல்கட்டத்தில் டென்மார்க் அணியே சிறப்பாக ஆடியது. ஆனால் அதன் பிறகு ஒரு ஆட்டத் திட்டத்துடன் களமிறங்கிய செக் அணி, டென்மார்க் துடுப்பாட்ட அணியின் பலவீனத்தை பயன்படுத்தி முதல் கோலை அடித்து முன்னுக்கு வந்தது.

49வது நிமிடத்தில் நன்றாக மேலேம்பி வந்த பந்தை 6அடி 8 அங்குலம் உயரமான செக் வீரர் காரல் போபோர்ஸ்கி 10மீற்றர்



தூரத்திலிருந்து தலையால்

அருமையான இந்த பெற்ற செக் அணி தனது படுத்தியது. 63வது நிமிதைப் பெற்றுக்கொண்டு முன்னேறிவந்த கோலி தாமஸ்மல் பந்தை, கோலுக்குள் களிலேயே பாவல் நெட்வட் இடது பக்கமாக முன்னேறி அடித்தார் பரோஸ்.

கடைசி நிமிடத்தில் தங் வாய்ப் புக்களையும் டென்மார்க்



முட்டி கோலுக்குள் தள்ளினார். கோலைத் தொடர்ந்து உற்சாகம் தாக்குதல் ஆட்டத்தை தீவிரப் டத்தில் காரல் அடித்த பந் முன்னேறிய செக் வீரர் பரோஸ், சோரன் சனின் கையில் சிக்கா தள்ளினார். அடுத்த 5நிமிடங் தந்த பந்தை எடுத்துக்கொண்டு அருமையாக 2 வது கோலை

களுக்கு கிடைத்த 2 நல் அணியினால் . கோலாக்க

முடியவில்லை. இறுதியில் 3-0என்ற கோல்கணக்கில் செக்கோஸ்லோவாகியா அணி வென்றது.

இந்தப் போட்டியில் இதுவரை தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வந்துள்ள செக் அணி, அரையிறுதியில் கிரீஸுடன் மோதுகின்றது. இந்தப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

(உ)

## விம்பிள்டன் 2004

# ரோஜர் பெரடர் அபாரா ஆட்டம்

## 4 வது சுற்றுக்கு முன்னேற்றம்

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அபாரமாக ஆடி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. கடந்த சில நாட்களாக லண்டனில் அடிக்கடி மழை பெய்து வருகிறது. இந்நிலையில் 6 ஆம் நாள் ஆட்டமான, கடந்த சனியன்று தொடர் மழை காரணமாகப் போட்டிகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் ஒத்திவைக்கப்பட்டன. கடந்த 23 ஆம் திகதி நடந்த தொடரின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போதும் மழை காரணமாக ஒருபோட்டி கூட நடக்கவில்லை. போட்டிகள் அனைத்தும் அடுத்த நாள் ஒத்தி வைக்கப்பட்டன.

இதன்மூலம் 127 ஆண்டுகால விம்பிள்டன் டென்னிஸ் வரலாற்றில், ஒரே வாரத்தில் இரண்டுமுறை போட்டிகள் அனைத்தும் அடுத்த நாள் ஒத்தி வைக்கப்படுவது இது மூன்றாவது முறை.

இதற்கு முன் 1991 மற்றும் 1997ல் ஒரே வாரத்தில் இரண்டு முறை போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.ஓய்வு நாளான நேற்று முன்தினம் போட்டிகள் முன்னதாகவே தொடங்கவிருந்தன. இந்நிலையில், நேற்று முன்தினம் மழை பெய்யவே போட்டிகள் தாமதமாகவே தொடக்கப்பட்டன. மூன்றாம் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. முதல் போட்டியாக ஆண்கள் பிரிவில் நடப்பு சம்பியனான ரோஜர் பெரடர், சுவீடனின் தாமஸ் ஜான்சனை சந்தித்தார். இதில் பெரடர் 6-3, 6-4, 6-3என்ற நேர் செட்களில் தாமஸை வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி, பரான்சின் நாதலிடிகேயை எதிர்த்து விளையாடினார். இதில் கேப்ரியாட்டி 7-5, 6-1 என்ற சுலப செட்களில் டிகேயை வென்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் குரோஷியாவின் கரோலினா ஸ்பரம், அமெரிக்காவின் மேகன் சவுக்னெசியை சந்தித்தார். விறுப்பாக நடந்த இப் போட்டியில் கரோலினா 7-6 (7/5), 7-6 (7/2) என்ற நேர் செட்களில் மேகனை வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.கரோலினா இரண்டாவது சுற்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் வனஸ் வில்லியம்ஸை வென்றது குறிப்பிடத்தக்கது. (உ)

# லூஸுடன் சுற்றித் திரிகிறேனாம் பத்திரிகைகள் மீது பெக்காம் பாய்ச்சல்

தனது தனிப்பட்ட வாழ்க்கையில அவதூறு வெளியிடும் பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம்.

போர்த்துக்கலில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கோப்பை கால் பந்துப் போட்டியில் ,போர்த்துக்கலிடம் பொனால்டி சூட் அவுட்டில் 5-6 எனத் தோல்வியுற்று வெளியேறியது இங்கிலாந்து.கால்பந்து உலகில் அதிகமான சம்பளத்துகக்கு ஆடிவரும் பெக்காம் தனது பொனால்டி வாய்ப்பில் கோல் போடவில்லை.



இதையடுத்து கண், காது, மூக்கு வைத்து பத்திரிகைகள் எழுத ஆரம்பித்துவிட்டன. இங்கிலாந்தில் தனது மனைவி, குழந்தைகளை விட்டுவிட்டு, தனது முன்னாள் உதவியாளர் ரெபக்காலூஸ் உடன் பெக்காம் சுற்றித் திரிகிறார் என வெளிவந்த செய்தியால் ஆத்திரம் அடைந்தார் பெக்காம்.


அச் செய்தியை மறுத்த பெக்காம், அப்பத்திரிகை மீது வழக்கு தொடரப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பெக்காமின் மனைவி பொப் ஸ்டார் விக்டோரியா மற்றும் புருக்ளின் ரோமியோ ஆகிய 2மகன்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் இங்கிலாந்தில் மான் செஸ்டரில் வசித்து வருகின்றனர்.

ஆனால் ஸ்பெயினில் மாட்ரிட் அணிக்காக ஆடிவருவதால் அங்கேயே பெரும்பாலான தினங்களை அவர் கழிக்க வேண்டியுள்ளது. மான்செஸ்டர் யுனைட்டெட் அணியிலிருந்து மாட்டிரிட் அணிக்கு 2003 ஜுலையில் பல கோடிகளுக்கு ஒப்பந்தமானார் பெக்காம். இந்நிலையில் குடும்ப வாழ்க்கையில் தாக்குதல் தொடுத்துள்ள ஊடகங்களுக்கு எச்சரிக்கை விடுத்து அவர் கூறியுள்ளதாவது,

இங்கிலாந்தின் டிரா..போர்டில் மனைவி, குழந்தைகளுடன் எளிதாகச் சுற்றலாம், ஆனால் மாட்டிட்டில் அவ்வாறு இருக்க முடியாது. ரசிகர்கள் என்னை பெரிதும் அடையாளம் கண்டுவைத்துள்ளனர். அதனால் மறைந்துதான் பல இடங்களுக்கு செல்ல உள்ளது அதை பத்திரிகைகள் அவதூறாக வெளியிடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

(உ)



சீனாவின் குவாங்ஹூவில் சனிக்கிழமை நடைபெற்ற சர்வதேச டிராகன் படகுப் போட்டியில் பங்கேற்ற படகுகள்.

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் நடாத்தும் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரவு 7.00மணிக்கு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலை வாணி விளையாட்டுக் கழகமும்,

8.00மணிக்கு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாடும் மீன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004

XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 45 தினங்கள்

# தன்னம்பிக்கை மிக்க தன்ராஜ் பிள்ளை

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்திய ஹொக்கி அணி அரையிறுதியில் விளையாடும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்தியாவின் நட்சத்திர வீரர் தன்ராஜ் பிள்ளை.



36வயதாகும் இவர் 4-வது முறையாக ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெறுவேன் எனவும் உறுதி தெரிவித்துள்ளா.

முதல் கட்டமாக அறிவிக்கப்கப்பட்ட இந்திய உத்தேச அணியில் தன்ராஜ் பிள்ளை இடம்பெறவில்லை. இந்நிலையில் முனனாள் வரர்கள் , ரசிகர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவரை உடனடியாக அணியில் சேர்த்தது ஹொக்கி சம்மேளனம். தற்போது அமெரிக்கா உட்பட பல்வேறு வெளிநாடுகளில் பயிற்சி ஆட்டங்களில் இநதிய உத்தேச அணியினர் விளையாடி வருகின் கிறனர்.

இந்நிலையில பி.பி.சி.விளையாட்டுவார இதழுக்கு அளித்துளள பேட்டியில் தன்ராஜ் பிள்ளை கூறி யுள்ளதாவது,

எவ்வளவு காலம் உடல்தகுதியுடன் இருக்கிறேனோ அதுவரை விளையாடுவேன். ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வாகுவேன் என்று நம்பிக்கை எனக்கு உள்ளது. 100சதவீதம் அதற்கான தகுதியுடன் உள்ளேன். அமெரிக்காவில் மேற்கொண்ட பயிற்சி புதுவிதமான உத்வேகத்தை அளித்துள்ளது. அங்கு பெற்ற பயிற்சி மூலம உடல் திறன் கூடியுள்ளது. எனது வேகமும் அதிகரித்துள்ளது.

எதென்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் இந்தியா நிச்சயம அரையிறுதிச் சுற்றில் விளையாடும. கடந்த 2 ஒலிம்பிக்கிலும் பதக்கத்துக்கு அருகில் வந்தும் வெற்றிகாண முடியவிலலை. அவ் வளவு அனுபவம்வாய்ந்த இந்திய அணி இம்முறையும் சிறப்பாக விளையாடும் என நம்புகிறேன். இந்த ஒலிம்பிக்கில் அதி சிறப்பாக விளையாடி பதக்கம் வெல்வதே எங்களது பிரதான நோக்கம் என்றார் அவர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# மன்னர் வீட்டுத் திருமணம்

பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம் 1920 களின் கடைசி அப்போது நடந்த உண்மை நிகழ்ச்சி இது. ஒரு கல்யாண மாப்பிள்ளை ரயிலில் வந்து இறங்கப் போகிறார். அவரை வரவேற்க ஒரு ராஜகுடும்பமே வந்து காத்துக்கொண்டிருந்தது. மங்களூரிலிருந்து வந்து இறங்கப்போகும் அந்த மாப்பிள்ளையார் தெரியுமா? ஒரு நாய்!

உண்மைதான், அந்த நாய்க்குத்தான்கல்யாணம்சுதேசி சமஸ்தானத்து மன்னர்களில் ஒருவர் ஜுனாகட் மகாராஜா. அவரது வளர்ப்பு நாய் ரோஷனாரா. அதற்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். மாப்பிள்ளை தேடினார். மங் களூர் மகாராஜாவின் வளர்ப்பு நாய் ஒன்று இருந்தது. அதன் பெயர் பாபி இரண்டுக்கும் திருமணம் நடத்த முடிவெடுத் தார்.

திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று உத்தரவிட்டார். ஆயிரக்கணக்கான அழைப்பிதழ் கள். பல சமஸ்தான மன்னர்கள், ஜமீன்தார்கள், பிரிட்டிஷ் அதிகாரிகள், பெரிய பணக்காரர்கள் இப்படி நிறையப் பேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி வைத்தனர்.

பத்திரிகையைப் பார்த்தவர்கள் எல்லோரும் திகைத்துப் போய்விட்டார்கள். இருந்தாலும் என்ன செய்வது? ராஜாவே அழைக்கிறார் போகாமல் இருக்க முடியுமா? அந்த சமயத்தில் நாட்டின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் இர்வின் பிரபு. அவருக்கும் ஒரு பத்திரிகை போயிருக்கிறது. வாங்கிப் பார்த்தும் அவருக்குப் பயங்கர எரிச்சல் உடனே குப்பைத் தொட்டியில் போட்டாராம் மாட்சிமைதங்கிய பிரிட்டன் சக்கரவர்த் தியின் பிரதிநிதியான தன்னை கேவலம் ஒரு நாயின் திரு மணத்துக்காக அழைப்பதா என்று அவருக்கு ஆத்திரம் இருந் தாலும் திருமணம் பிரமாதமாக நடந்ததாம்.

திருமணத்தன்று பெண்ணுக்கு ஸ்பெஷல் குளியல் தண் ணீருக்குப் பதிலாக வாசனைத் திரவியங்கள் பன்னீரில் குளித்த பின்பு அலங்காரம்,வைரமாலை, முத்துமாலை என ஏகப்பட்ட அலங்காரம் மாப்பிள்ளையை அழைக்க ரயில் நிலையத்தில் ராஜ குடும்பமே காத்துக் கொண்டிருந்தது. அவர்களது வளர் ப்பு நாய்கள் 250! அத்தனை நாய்களுக்கும் பட்டுத்துணி போர்த்தியிருந்தது. முத்து விடங்கள் அணிந்திருந்தார்கள். ராஜநாய்கள் அவற்றையும் வீதியில் நடக்க விடவில்லையாம். அவற்றைச் சுமந்து கொண்டுபோக அலங்கரிக்கப்பட்ட யானை கள் காத்துக்கொண்டிருந்தன.

மாப்பிள்ளை வரவேற்பு எப்படித் தெரியுமா? அது நடந்து வரும்பாதை முழுதும் இரத்தினக் கம்பளம் விரித்திருந்தது. இரண்டு பக்கமும் ராஜாங்க அதிகாரிகள் கைகட்டி நின்றார் கள் அரசுப் படைவீரர்கள் அணிவகுப்பு மரியாதை செலுத்து கிறார்கள்.

அந்த நாய் ராஜ மரியாதையுடன் நடந்து வருகின்றது நகையெல்லாம் போட்டுக்கொண்டு. திருமண மண்டபத்திற்கு வந்துசேர்ந்தது. அங்கே கல்யாணம் அமோகமாக நடக்கின்றது.

இந்தத் திருமணத்தை முன்னிட்டு அந்த ஜீனாகட் சமஸ் தானத்திற்கு மூன்று நாட்கள் விடுமுறை. திருமணத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஏக தடல் புடலாக விருந்து நாட்டியம் எல்லாம் பிரமாதமாக நடந்ததாம். இந்தக் கல்யாணத் தில் கலந்துகொள்ள வந்திருந்த மற்றைய சமஸ்தானத்து மன்னர்கள், திவான்கள், அரச குடும்பத்தினர் என 700 பேர் அவர்கள் வந்துபோவதற்காக விசேடமாக ரயில்கள் விட்டார்கள்.

திருமணம் முடிந்ததும் அந்த நாய்த் தம்பதிகளுடன் பெரிய பெரிய மன்னர்களெல்லாம் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட் டார்களாம். ஏ.சி.அறையில் அந்தத் தம்பதிகள் சிலகாலம் வாழ்ந்திருந்தார்கள்.

கொஞ்ச நாட்களில் மாப்பிள்ளைக்கு மரியாதை குறைய ஆரம்பித்துவிட்டது. வெளியில் துரத்திவிட்டார்களாம். அந்தப் பெண் நாய் மட்டும் ராஜபோகங்களை அனுபவித்து வந்ததாம். இந்தத் திருமணத்தைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தும் மற்றைய சமஸ்தான மன்னர்களும் நாய்த் திருமண்ங்கள் நடத்த ஆரம்பித்து விட்டார்களாம். அது இருக்கட் டும் நாம் இப்போது கதைக்குவருவோம்.

ஒரு ராஜாவுக்கு நீண்ட நாட்கள் கழித்து ஒரு குழந்தை பிறந் ததாம். அரண்மனை ஜோஷ்யரை அழைத்தார். ராஜா "ஜோஷி யரே! என்மகன் வருங்காலத்தில் சிறந்த வாள் வீரனாக வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். வருவானா என்று பார்த்துச்சொல்லுங்கள்" என்றார்.

ஜோஷியர் சொன்னார் 'மன்னா! உங்கள் பிள்ளை வாள் வீரனாக வருவது கஸ்டம்.ஆனால் அவரும் உங்களைப் போலவே நாய்க்குட்டிகள் மீது பிரியமாக இருப்பார். அவற் றிற்குத் திருமணமும் செய்துவைப்பார்' என்றார் 'அதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?' என்று கேட்டார் ராஜா. 'அரசே உங்கள் பிள்ளைக்கு வாள் மீது உள்ள பிரியத்தைக் காட்டிலும் நாய்மீதுள்ள பிரியம் அதிகம் என்பதற்கான அறிகுறி இப்போதே தெரிகிறது. நன்கு கவனித்துப்பாருங்கள். அவர் வாள் வாள் என்று கத்தவில்லை வள்! வள்! என்று கத்துகிறார்' என்றார். அரண்மனை ஜோஷியர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

# வேண்டிய நிதியை ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு தேவையான நிதியை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம் பட்டதாரிகள் தமக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருமாறு கோரிய போது அவர்கள் மீது தாக்கு தலை நடத்தியும், அச்சுறுத்தியும்,வந்தவர்களே இன்று எமது அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றார்கள்.

எமது அரசாங்கம் மக்களை ஒருபோதும் ஏமாற்றவில்லை. படிப்படியாகவே மக்களுக்கு அளித்தவாக்குறுதிகளை அரசு நிறைவேற்றும்.



மக்கள் எம்மீது மிகுந்த நம் பிக்கை கொண்டிருக்கின்றார்கள் இதனைக் கண்டு பொறாமை கொள் ளும் ஐக்கிய தேசியக் கட்சி எம்மை விமர்சித்து எம்மீது மக்கள் கொண் டுள்ள நம்பிக்கையை சிதைக்க முற்படுகின்றது என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியில் தலைவர் சோமவன்ச அமரசிங்க பேசுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு தான் ஆட்சிப்பீட மேறுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி எடுத்து வருகின்றது.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியின் இந்த முயற்சி தோல்வி யிலேயே முடியும் என்றார்.

(உ-60,10)

## மொனறாகலையில் சுற்றிவளைப்பு

## சந்தேகத்தின் பேரில் 141பேர் கைது

(மொனறாகல)

மொனறாகல பிரதேசத்தில் பொலிஸார் மேற் கொண்ட திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல்நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில் 141பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்கள், போதைப்பொருட்கள் மற்றும் மோசடிகள் போன்றவற்றுடன் சம்பந்தப் பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டட இச் சோதனை நடவடிக்கைகளில் சுமார் 700 பொலிஸார் ஈடுபட்டனர்.

(உ-4,60)

## இராசி பலன்

**29.06.2004**

**(ஆனி 15, செவ்வாய்க்கிழமை)**

**துவாதசி பின்னிரவு 12.35 வரை**

**விசாகம் பி.ப. 4.15 வரை**

**இராகுகாலம் 2.56-4.26 வரை**

**சுபநேரம் 10.26-11.56 வரை**

**மேடம்**
மனக்கவலை, பொருள் விரயம், சரீர வியாதி, காரிய தாமதம்.

**இடபம்**
கீர்த்தி, மனோ சௌக்கியம், மாதர் நட்பு, எடுத்தகருமங்கள் கைகூடும்.

**மிதுனம்**
செய்தொழில் நன்மை, சத்துருஜெயம் காரிய சித்தி, பொருள் சேர்க்கை.

**கடகம்**
அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணத் தட்டுப்பாடு, குடும்ப நன்மை.

**சிங்கம்**
புத்தி சஞ்சலம், வேலையில் ஆர்வம், முயற்சிதாமதம், தனவிரயம்.

**கன்னி**
ஜனவசியம், தேக சௌக்கியம்,எடுத்த கருமங்கள் கைகூடும்,போசன சுகம்.

**துலாம்**
போசன சுகக் குறைவு, மனோ சங்கடம், அதிக செலவு, கௌரவக் குறைவு,

**விருச்சிகம்**
வெகுமானம், சயனசுகம், நல்ல முயற்சி, சிந்தனை மிகுதி.

**தனுசு**
தனவிரயம், மனச்சோர்வு, காரிய தாமதம், உறவினர் மனஸ்தாபம்.

**மகரம்**
சினேகிதர் சந்திப்பு, குடும்ப நன்மை, சயனசுகம், செய்தொழில் நன்மை.

**கும்பம்**
பிரயுத் தனம், நன்கொடை, இஷ்ட சித்தி, நண்பர்கள் உதவி.

**மீனம்**
உத்தியோக பங்கம், குடும்பக் கவலை, [illegible]

([illegible] கணிப்பிடப்பட்டது)

வளவன்

## கைக் குண்டுத் தாக்குதலில் கணவனும் மனைவியும் பலி

### ஒன்பது மாதக் குழந்தை உயிர் தப்பியது

(மட்டக்களப்பு)

அம்பாறை சங்கமன் கண்டிப் பிரதேசத்தில் உள்ள வீடொன் றின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் கணவனும் மனைவியும் கொல்லப்பட்டனர். இவர்களுக்கருகில் உறங்கிக் கொண்டிருந்த ஒன்பது மாதக் கைக் குழந்தை காயங்கள் எதுவுமின்றித் தப்பியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இத் தாக்குதல் இடம் பெற் றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கோபால் பால கிருஷ்ணன் (வயது38) அவரது மனைவி மாரியம்மா ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவார்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட கோபால் பாலகிருஷ்ணன், கொலைச்சம்பவம் ஒன்றில் குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் இருந்து கடந்த 24ஆம் திகதியே விடுதலை செய்யப்பட்டிருந்தார். தனிப்பட்ட பகைமையே இச்சம்பவத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

## கருணா விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் கருணா விவகாரத்துக்கு உறுதியான தீர்காணப்பட வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்க ளிடம் வற்புறுத்தவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் சமாதானத் தூது வர் எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சியில் நாளை சந்திக்கும் போது இதுகுறித்த தமது கடுமையான நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் அவரிடம் தெரிவிக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகள் ஆரம்பிப் பதற்கு முன் னர் இவ்விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென அவரிடம் தமிழச் செல்வன் வலியிறுத்துவார். (உ)

## நயினாதீவு செல்லும் பக்தர்கள் மீது அல்லைப்பிட்டியில் படையினர் கெடுபிடி

(மண்கும்பான்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் கெடுபிடிகளுக்கு ஆளாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மேற்படி ஆலய உற்சவ காலமாகையால் பெருந் திரளான பக்தர்கள் அங்கு தினமும் சென்று வருகின்றனர்.

இவர்களை வாகனங்களில் இருந்து இறக்கி சிறிது தூரம் நடக்கச் செய்யும் படையினர் அவர்கள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லும் அர்ச்சனைப் பொருட்களையும் துருவித்துருவி ஆராய் கின்றனர்.

இதை விட அதிகளவு வாகனங்கள் இவ்வாறு நிறுத்தப் படுவதால் மீள அவற்றை எடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலை எதிர் கொள்ளப்படுகிறது.

இவ்வாறே குறிகட்டுவான் இறங்கு துறையிலும் பக்தர்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். - குறள்

# வலம்புரி

## குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

காணாமல் போனோர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணை நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

செம்மணிப் பகுதியில் வைத்து மாணவி கிருஷாந்தி குமாரசாமி, அவரது தாயார், சகோதரன் மற்றும் அயலவரென நால்வரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் சோமவன்ச ராஜபக்ஷவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட போது 'ஓ'வென அழுது புலம்பிய ராஜபக்ஷ தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொலை செய்த இராணுவ அதிகாரிகள் பலர் இருக்கின்றார்கள் என்பதை நீதிமன்றத்தில் வைத்துக் கூறியிருந்தார். இதற்கு முன்னர், படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலர் கொலை செய்யப்பட்டு செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்ட செய்தியையும் நீதிமன்றத்தில் அவரே தெரிவித்திருந்தார்.

ராஜபக்ஷவினால் தெரிவிக்கப்பட்ட தகவல் அப்போது யாழ்ப்பாணத்தில் பொறுப்பாக இருந்த படையதிகாரிகளுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுக்க, தம்மைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர்கள் முனைப்புடன் செயற்பட்டார்கள்.

இரவோடு இரவாக செம்மணிப் பகுதிப் புதைகுழிகள் தோண்டப்பட்டு மனித எச்சங்கள் அகற்றப்பட்டன. ராஜபக்ஷவின் தகவல் கிடைத்து நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக இராணுவ அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக் கொண்டனர்.

எனினும் ஏதோ ஒருவகையாக ராஜபக்ஷ மட்டும் மாட்டுப்பட்டுக் கொண்டார். மாணவி கிருஷாந்தி உட்பட நால்வரின் கொலையை நெறிப்படுத்தியவர் ராஜபக்ஷ என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவ்வகையில் அவருக்கு நீதிமன்றம் உரிய தண்டனையை வழங்கியதும் பொருத்தமானதே.

ஆனால் நீதிமன்றத்தில் வைத்து ராஜபக்ஷவினால் கூறப்பட்ட,

- தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொலை செய்த படையதிகாரிகள் இருக்கிறார்கள்.
- படையதிகாரிகளின் உத்தரவுக்கமையவே நாம் செயற்பட்டோம்.
- என்னை மாட்டிவிட்டு உயரதிகாரிகள் தப்பித்துக் கொண்டு விட்டார்கள்.

எனக் கூறிய விடயங்களை அப்படியே விட்டுவிடுவது குற்றவாளிகள்-சூத்திரதாரிகள் தப்பிக் கொள்வதற்கு வாய்ப்பாகிவிடும். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக் கொண்டாலும், ஒரு நிரபராதி தண்டனை பெறக்கூடாதென்பது நீதித்தத்துவம்.

இதேபோல், இரண்டு குற்றவாளிகளில் ஒரு குற்றவாளி தண்டனைபெற இன்னொரு குற்றவாளி தப்பித்துக் கொள்வதும் நீதியாகாது.

எனவே ராஜபக்ஷ தண்டனை பெறுவதை நீதியின்பாற்பட்டதென கூறவேண்டுமாயின், ராஜபக்ஷவினால் இனங்காட்டப்பட்ட ஏனைய படையதிகாரிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 1995ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பு இடம் பெற்ற பின்னர் 1996ஆம் ஆண்டு மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியமர வந்தவர்கள் பட்ட இன்னல்கள் ஏராளம்.

அதிலும் அறுநூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காணாமற் போன சம்பவத்தின் துயரக் கோடுகள் இன்னமும் அகலவில்லை.

எனினும் இதுவிடயத்தில் எந்த படையதிகாரிகளும் இதுவரை விளக்கம், விசாரணை என்பதற்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரியவில்லை.

ஆக, ராஜபக்ஷ மீதான மனுக்கள், விசாரணைகளுடன் குற்றங்களை கொலைகளைச் செய்த படையதிகாரிகள்-பொறுப்பதிகாரிகள்-கட்டளைத் தளபதிகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவது நீதியை நிலைநாட்டும் செயலாகும்.

# கட்சித் தலைவர்கள் மாநாட்டை கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை

## எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கடிதம்

(கொழும்பு)

நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் மாநாடொன்றைக் கூட்டுமாறு கூட்டு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் கூட்டாக வேண்டுகோளொன்றை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கூட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று சபாநயாகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக அதன் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, நாடாளுமன்றக் குழுத் தலைவர் மகிந்த சமரசிங்க ஆகியோரும், ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் வணக்கத்துக்குரிய அத்து ரெலியே ரத்னா தேரரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீமும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் எஸ். செல்லச்சாமியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ஜோசப் பரராஜ சிங்கமும், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் ஆர்.இராதாகிருஸ்ணனும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த வாரத்தில் ஒரு நாளில் இந்தக் கட்சித் தலைவர் மாநாட்டைக் கூட்டுமாறு இந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ)

## ஐ.தே.க.ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆட்பட்டவர்களுக்கு சலுகை

(கொழும்பு)

கடந்த 2001 டிசம்பர் தொடக்கம் 2004 ஏப்ரல் வரையிலான காலங்களில் நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் விசேட சுற்றறிக்கை ஒன்றினை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும். திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் அரச கம்பனிகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

2001 டிசம்பர் மாதம் தொடக்கம் 2004 ஏப்ரல் வரையிலான காலப் பகுதிக்குள்ளான நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் முதலியவற்றின் போது அரசியல் பழி வாங்கல்களுக்கு ஆளானவர்களின் முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்து அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளானவர்களாக நிரூபணமாகின்றவர்களுக்கு சலுகையளிப்பதற்காக விதந்துரைப்பதற்கு ஒவ்வொரு அமைச்சு மட்டத்திலும் பிரதி அமைச்சர் தலைமையில் அரசியல் பழிவாங்கல் புலனாய்வு குழுக்களை அமைக்க வேண்டுமென அமைச்சரவை கொள்கை ரீதியில் தீர்மானித்துள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் அரசியல் பழிவாங்கலுக்கும் புலனாய்வுக் குழுக்களின் சிபார்சுகளுக்கு அமைவாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் எனவும் தெரியவருகின்றது. (உ)

## இ.தொ.க.வினை இணைக்கும் அரசின் முயற்சி மீண்டும் தோல்வி

(கொழும்பு)

இ.தொ.க.வினை சேர்த்துக்கொள்ள அரசாங்கம் மீணடும் எடுத்தமுயற்சி தோல்விகண்டுள்ளது. மீண்டும் பாராளுமன்றம் கூடும் போது இ.தொ.க.வினை தம்பக்கம் இழுக்க அரசாங்கம் நினைத்திருந்தது. இதன்படி, பெருந்தோட்டத்துறை அமைச்சையும் இ.தொ.க.வுக்கு வழங்க ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார். ஆனால் இ.தொ.க.தற்போது மீண்டும் அக்கோரிக்கையை நிராகரித்துள்ளது.

இதுபற்றி பிரதித்தலைவர் செல்வச்சாமி சண்டேலிடருக்கு அளித்த பேட்டியில்,

பெருந்தோட்ட அமைச்சு வழங்கினாலும் தாம் இணைய மாட்டோம். அவ்வாறு இ.தொ.க.அந்த அமைச்சையும் வேறு அமைச்சுகள் சிலவற்றையும் பொறுப்பேற்றாலும் தற்போதைய அரசின் கீழ் பெருந்தோட்டத் தொழிலாளர் மேலும் வறுமையில் வாடுவதால் எம்மால் அவர்களுக்கு நன்மை எதுவும் பெரிதாக செய்யமுடியாது. தற்போதைய வேலைநிறுத்தங்கள் அனைத்தும் நாட்டின் மோசமான நிர்வாகத்தையே காட்டுகிறது.

தற்போதைய அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு எமது கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும். அரசியல் தலைவர்களின் சொந்த நலனுக்காக நாட்டின் அரசியலமைப்பையே மாற்றநினைக்கும் ஒரே நாடு உலகில் இலங்கை மட்டும்தான்.

அரசியலமைப்பு மாற்றப்பட்டாலும் பொதுவாழ்க்கைத்தரம் உயரவா போகிறது? நாட்டில் மாற்றங்கள் வந்திடுமா? எனக் கேள்வியெழுப்பிய அவர், தற்போதைய அரசியலமைப்பு பௌத்த குருமார்க்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்கியுள்ளது.ஆனால் நாம் பௌத்தர் என கூறிக்கொள்பவர்கள் பாராளுமன்றில் குருமார்களையே தாக்கியுள்ளனர் என்றார். (உ-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நம்பிக்கையுடன் இரு. கடவுளை முற்றிலும் சரணடை. அங்ஙனமாயின் நீ தானாக ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. உனது பொறுப்பைக் கடவுளே ஏற்றுக்கொள்வார்.

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விரைவில் உயரும்

(கொழும்பு)

பால்மா உட்பட அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன.பால்மாவினை இறக்குமதி செய்பவர்களின் வேண்டுகோளிற்கிணங்கவே இவ் விலை அதிகரிப்பினை ஏற்படுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை அதன் ஆணைக்குழுவிற்குச் சிபார்சு செய்துள்ளது.

பால்மா விலைகள் 8 வீதம் முதல் 10 வீதம் வரை அதிகரிக்கப்படவுள்ளன.டொலருக் கெதிரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும். எதிர்வரும் யூலை 15 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த விலை அதிகரிப்பு ஏற்படவுள்ளது என வெளியாகிய செய்திகளையும் மாகாண சபைத் தேர்தல்களின் பின் விலை அதிகரிக்கப்படவுள்ளது என வெளியாகிய செய்தியையும் நுகர்வோர் விவகார அதிகார சபைத் தலைவர் எம். முஸின் மறுத்துள்ளார்.

இதேவேளை பால்மா விலை அதிகரிப்பானது பணவீககத்திற்கு வழிவகுக்கும் என்றும் ரூபாவின் விலையை ஸ்திரமாக்க வேண்டு மெனில் அரசாங்கம் பொருளாதார சீர்திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் பொருளாதார நிதி வல்லுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலும் ரூபா பெறுமதியை உயர்த் துவதற்கு மத்திய வங்கி வெளிநாட்டு மாற்றுச் சந்தையினுள் தலையிட்டுள்ளது. தொடர்ந்து வங்கி இவ்வாறு செயற்படும் என வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-6)

## ஒழுங்கீனமான குத்தகையில் 25.5 மில்லியன் அரசுக்கு இழப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக்கவுடன் தொடர்புடைய கொழும்பு வக்ஷ்வல் வீதியிலுள்ள கட்டடமொன்றை 5வருட குத்தகைக்கு எடுத்த விடயத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால் அரசாங்கத்திற்கு 25.5மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

அரசின் மதிப்பீட்டாளரின் சிபார்சின் பேரில் அக்கட்டடத்திற்கு மாத வாடகை ஒரு மில்லியன். ஆனால் அமைச்சு மாத வாடகையாக ஒரு மில்லியன் 4லட்சத்து 25ஆயிரம் ரூபாவை வழங்கி வந்துள்ளமை புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அமைச்சு கேள்வி அறிவித்தலை விடுத்த போது எம்.ஹனஸ் என்பவர் தனது மேற்படி கட்டடத்தை குத்தகைக்கு விட்டார். அரசாங்க அமைச்சின் கேள்வி அறிவித்தல் திணைக்களத் தலைவருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. ஆனால் நில உரிமையாளர் அக்கட்டடத்தை கொள்வனவு செய்ய 130மில்லியன் தர ஒப்புக்கொண்டது என ரவி கருணா நாயக்கவுக்கு தெரிவித்துவிட்டிருந்தார்.

உடனே இதை அறிந்த அமைச்சு மதிப்பீட்டாளர் வழங்கிய அறிவுறுத்தலை மீறி ஒரு மாத வாடகையாக ஒரு மில்லியன் 4 இலட்சத்து 25ஆயிரம் ரூபாவிற்கு அக்கட்டடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டது. இவ் விவகாரத்தில் ஒரு கேள்வி அறிவித்தல் தொடர்பாக ஆணைக்குழு எதுவும் நியமிக்கப்படவில்லை. அரசாங்க மதிப்பீட்டாளரின் கருத்துப்படி அமைச்சு அதிகாரிகள் செயற்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தற்போது அமைச்சுக்கு 25.5மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. (உ-6)

## பலகல்லவின் பதவி நீடிப்பு ரத்து கருணாவோடு சம்பந்தப்பட்டது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணா விவகாரத்தில் இராணுவத்தினாரின் தலையீடு இருந்தமை தொடர்பான குற்றச் சாட்டுக்கள் உண்மையெனக் கண்டறியப்பட்டதை அடுத்து இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவி நீடிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இம்மாதம் 30ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவுக்கு மேலும் ஆறு வாரங்களுக்கான சேவை நீடிப்பை ஜனாதிபதி வழங்கியிருந்த போதும் கருணாவுக்கு இராணுவம் பாதுகாப்பு கொடுத்துள்ள விவகாரம் பூதாகரமாக உருவெடுத்துள்ள நிலையில் அவரது பதவி நீடிப்பை ஜனாதிபதி நிறுத்தியுள்ளதாகவும் இந்தியாவில் மேஜர் ஜெனரல் சுனந்த கொட்டேகொட புதிய இராணுவத் தளபதியாக நியமனம் பெறுவது உறுதியாகியுள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6,121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணைக்குழுவினரை பொலிஸார் தாக்கினர்

(கொழும்பு)

பாலியகொட பொலிஸ் நிலையத்தைக் கண்காணிக்கச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று உத்தியோகத்தர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இப் பொலிஸ் நிலையத்தில் கைதிகள் துன்புறுத்தப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டினையடுத்து அங்கு கண்காணிப்பு நடவடிக்கைக்காகச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் முறையிடவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ச-121)

## புத்தளம் கூட்டுறவுச் சங்கத்தில் 67 இலட்ச ரூபா நிதி மோசடி

(புத்தளம்)

புத்தளம் ப.நோ.கூ.சங்கத்தில் 67 இலட்ச ரூபா காசோலை மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து விநியோக முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளினால் கடந்த 25ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையின் போதே இம் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடியில் ஈடுபட்ட விநியோக முகாமையாளர் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதேவேளை உலக உணவுத் திட்டத்தினால் புத்தளம் பகுதிக்கு இச் சங்கம் மூலமாக வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-15)

## கட்சிக்கு எதிராக நீதிமன்றில் மனு

(புத்தளம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீத் ஏ மஜீத் நேற்று உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து அநாகரிகமான முறையில் தம்மை வெளியேற்றியுள்ளதாகத் தெரிவித்து இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி விஜதாஸ ராஜபக்ஷ நேற்று இவ்வழக்கைத் தாக்கல் செய்தார். இதேவேளை மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான ரிசாத் பதியூதீன் இன்று வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-15)

# முன்னாள் புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா பட்டகாட்டுக்கு அருகில் உள்ள சமயபுரம் என்னும் இடத்தில் முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது அரியாலையைச் சொந்த முகவரியாகவும் தற்போது வவுனியாவில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான கனகசபை தேவராசா (வயது49) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் புளொட் அமைப்பில் இருந்தவர் என்றும் தற்போது மேசன் வேலை செய்பவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது வேலையை முடித்துக் கொண்டு வீடுதிரும்பும்போது இனந் தெரியாதோரால் இவர் சுடப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் 9 மில்லிமீற்றர் துப்பாக்கி கொண்டு சுடப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ச-13)

## சான்றிதழ் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 1996ஆம் ஆண்டிற்குப் பின் இறுதித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இறுதித் தேர்வைப் பூர்த்தி செய்த மாணவர்கள் அனைவரையும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் அலுவலகத்திற்குச் சமுகமளித்து தங்களின் பெயர் விபரங்களைப் பதிவு செய்யுமாறு இயக்குநர் ரி.இராஜரட்ணம் கேட்டுள்ளார்.

இதேவேளை, 1996ஆம் ஆண்டில் இருந்து கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## தமிழ்க்..

நோக்குகின்ற பிரச்சினைகள் தற்போதைய அரசியல் நிலைபரம் மற்றும் மக்களின் விடுதலையை இலக்காகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்து கூட்டமைப்பினர் செயற்பட வேண்டிய விதம் முன்பள்ளிகளை சீராக இயங்க வைத்தல் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மீளக்குடியமர முடியாது அல்லற்படும் மக்கள் நிலைமைகள் தொடர்பாக தாம் கலந்துரையாடியதாகக் குறிப்பிட்டார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட கஜேந்திரகுமார் எம்.பி.கூறுகையில் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் தற்போது இந்தியாவினால் அரசாங்கத்திடம் முன் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தீர்வுத் திட்ட யோசனைகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அவர்களின் நிர்வாகத்தின் கீழும் அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களை வடக்குக் கிழக்கின் ஏனைய பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளிடம் விட்டுவிடுவதாக அறிகிறோம். இதுபற்றியும் கலந்து பேசினோம் என்றார். (உ-43,16)

## ஹலோட்ரஸ்ட் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் விஷமிகளின் தாக்குதலினால் பலத்த சேதங்களைச் சந்தித்த கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவந்த ஹலோட்ரஸ்ட் நிறுவனம் தனது பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

நேற்றைய தினம் கோப்பாய் இருபாலைப் பகுதியில் தனது வழமையான பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-43)

## கலைப்பீடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் இடம் பெறவுள்ளதாக கலைப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.(உ)

## ஹண்டர்..

போது பிரஸ்தாபச் சிறுவன் அதனுள் சிக்கி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மந்திகை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேதபரிசோதனையை மாவட்ட வைத்தி அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை மேற்கொண்டபின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மரண விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மரணம் விபத்தினால் ஏற்பட்டதென தீர்ப்பளித்ததுடன் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறும் ஹண்டரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-52)

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்-2004

2004ம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 30.06.2004ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்விபரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக் காணிகள், மற்றும் குடியிருப்புக் காணிகள்-15%
ஏனைய காணிகள் -20%

நிலுவை உட்பட 2004ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252,பிரிவு XII 252(1)இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இ.இராமலிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
28.06.2004

[C-276]

## எதிர்கால சமாதான...

ஒப்பந்த நடைமுறைகள் தொடர்பாக பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கடல் போக்குவரத்து, தரைப் போக்குவரத்து மற்றும் இயல்பான நடவடிக்கைகள் தொடர்பில் சில அழுத்தங்கள் எமக்கு ஏற்பட்டுள்ளன. இதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதென்று கண்காணிப்புக் குழுவினரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளதுடன் இதற்கான தீர்வை விரைவில் காணுமாறும் கேட்டுள்ளோம்.

சமாதான நடவடிக்கைகளையும் யுத்த நிறுத்த உடன்பாடு சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு கருணாவின் விவகாரம் இன்று பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

கருணா என்ற பெயரில் இராணுவத்தரப்பினரே இக் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதனை நாம் மிகவும் ஆணித்தரமாக உறுதி செய்துள்ளோம்.

கருணாவுடன் நீண்டகாலமாக இருந்துவிட்டு இன்று கருணாவை விட்டு விட்டுத் தப்பியோடிவந்து எம்முடன் இணைந்துள்ள முக்கிய பெண் போராளிகள் இதனை உறுதி செய்துள்ளார்கள். இந் நிலையில் சமாதான நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன்பாடுகள் என்பனவற்றை சரியான முறையில் நெறிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கண்காணிப்புக்குழுவிடமே உண்டு.

எம்மால் விலக்கப்பட்ட கருணாவை இராணுவத்தினர் பயன்படுத்திக் கொண்டு இருக்கும் வரை சமாதான முன்னெடுப்புக்களில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லையென கண்காணிப்புக்குழுவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளோம் என்று அப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (ம)

## கண்காணிப்பு..

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுப் பகல் 1.30 மணி முதல் 3 மணிவரை இடம் பெற்ற இச் சந்திப்பின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியறு ஹெவ்டே பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

## யாழ்.மேல்...

காணாமல் போனோர் தொடர்பாக யாழ்.மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 48 மனுக்களில் 14 வழக்குகள் நீதிபதி வரதராசாவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**ஜூலை 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**

இவ்விசாரணையின் போது முதலாம் பிரதிவாதியான ராஜபக்ஷ தொடர்பாக சில அறிவுறுத்தல்கள் சட்டமா அதிபரிடம் இருந்து பெற வேண்டியிருப்பதால் குறித்த வழக்கை விசாரிக்க வேறொரு தவணை வழங்குமாறு அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமி கோரியதையடுத்தும் தனக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தனது சார்பில் சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கு ஆயத்தம் செய்வதற்கு இவ்வழக்கிற்குத் தவணை வழங்குமாறு சோமரத்தின ராஜபக்ஷ கோரியதையடுத்தும் மேல் நீதிபதி வரதராசா வழக்கை அடுத்த மாதம் 28ஆம் திகதி ஒத்திவைத்தார்.

வழக்கு ஒத்திவைக்கப்பட்டதையடுத்து மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமவன்ச ராஜபக்ஷவை யாழ். சிறையில் வைத்திருப்பதில் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக யாழ்சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்ததனால் அவரைத் தொடர்ந்தும் வெலிக்கடைச் சிறையில் வைத்திருக்கும்படியும் அவரை பலாலி விமான நிலையம் வரை கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு வழங்குமாறும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(ம-16,19,43,4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.